RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

# மலர்:- 30, 11 ஆகஸ்ட் 2023 இதழ்:- 13

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

### *** 13வது திருத்தம் அவசியம்! அதனை மாற்ற முடியாது!
### *** மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்!
### *** ஆளும் கட்சி - எதிர்க்கட்சி என்ற மனப்பாங்கில் இருந்து மாற வேண்டும்



## ஜனாதிபதி ரணில் ஆற்றிய விசேட உரை

1987ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாணசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. எமது நாட்டில் 36 வருடங்களாக மாகாண சபை முறைமை செயற்பட்டு வருகின்றது. எனினும் 13ஆவது திருத்தச் (3ம் பக்கம் பார்க்க)

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

## 13 குறித்த அரசாங்கத்தின் திட்டம் என்ன? அரசாங்கத்திடம் சிங்களத் தலைவர்கள் கேள்வி!

13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் யோசனையை கோரியுள்ள அரசாங்கத்தின் திட்டம் என்னவென்று ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது. 13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக அரசியல் கட்சிகள் தமது பரிந்துரைகளை முன் மொழிவுகளையும் முன் வைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிகளுக்கு அறிவித்துள்ளார். (4ம்பக்கம்)

## மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் இந் தியாவுக்கு சென்று வந்ததன் பின்னர் பதின் மூன்றாவது திருத்தச் சட்டத்தை (21ம் பக்கம்)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

**என் இனமே! என் சனமே!**
**என்னை உனக்கு தெரிகிறதா?**
**தாகமாய் இருக்கின்றோம்!**
**கொஞ்சம் கிள்ளிப் போடுங்கள்!**
**29 ஒக்டோபர் 2023**



BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-6110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487


THINKING OF
SELLING OR BUYING A HOME?
www.AgentSiva.com
Your neighborhood sales representatives
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
20 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE
HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Simcoe St N & Conlin Rd
Oshawa $314,900
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University
Tecumesh Rd E & Hall Ave
Windsor $349,000
Bedrooms: 3+3 Washrooms: 4
Perfect For Investors
Markham & Eglinton
Scarborough $529,900
Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!
Dundas/Hurontario St
Mississauga $599,000
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building
Bramalea Rd & Queen St
Brampton $590,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Finished Basement
Lawrence & Morningside
Scarborough $629,900
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area
York St / Bremmer Blvd
Toronto $610,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Easy Access To Union Station
Markham Rd & Denison
Markham $635,999
Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.
Taunton & Ritson
Oshawa $699,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Upgraded floors throughout the home
Main St. E & Russell St.
Southgate $999,000
Bedrooms: 4 Washrooms: 3
3063 Sq Ft Bright & Spacious Home
Meadowvale & 401
Scarborough $995,000
Bedrooms: 3+2 Washrooms: 2
Brand New Entertainment Enclosure
Brimley Rd / St. Clair Ave
Scarborough $1,224,900
Bedrooms: 3+1 Washrooms: 4
All Renovated Washrooms
Meadowvale / 401
Scarborough $1,799,995
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated
Bayview & Major Mac
Richmond Hill $1,499,900
Bedrooms: 3+1 Washrooms: 4
Lots Of Upgrades!
9th Line/14th Ave
Markham $1,799,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly Renovated Luxury Home
Commercial/Retail
Grey Highlands $7,200,000
Dollarama And Tim Hortons.
Newly Built Tim Hortons Building
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!


EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# *** 13வது திருத்தம் அவசியம்! அதனை மாற்ற முடியாது!
# *** மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்!
# *** ஆளும் கட்சி - எதிர்க்கட்சி என்ற மனப்பாங்கில் இருந்து மாற வேண்டும்

## ஜனாதிபதி ரணில் ஆற்றிய விசேட உரை

1987ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாணசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. எமது நாட்டில் 36 வருடங்களாக மாகாண சபை முறைமை செயற்பட்டு வருகின்றது. எனினும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விதம் தொடர்பில் பல சிக்கல்கள் உள்ளன. அத்துடன் மாகாண சபைகள் தொடர்பிலும் பல பிரச்சினைகள் உள்ளன. நாம் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எமது நாட்டின் அபிவிருத்திக்கும் எதிர்காலத்திற்கும் ஏற்ற வகையில் 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும்.




ஆனால் இந்த பாராளுமன்றத்தில் நாம் அனைவரும் வெளிப்படையாகவும் நடுநிலையாகவும் ஆழமாக கலந்துரையாடிய பின்னர் ஒரு உடன்பாட்டிற்கு வந்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். அதனால் தான் அண்மையில் சர்வகட்சி மாநாட்டை ஏற்பாடு செய்தோம். இந்த மாநாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

அந்த மாநாட்டில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக எங்களால் முழுமையான உடன்பாட்டை எட்ட முடியவில்லை. அதிகாரப் பரவலாக்கத்திற்கான ஒரு குறிப்பிட்ட தேசிய வேலைத்திட்டம் பற்றி வெளிப்படையான கருத்துக்கள் எதுவும் அங்கு முன் வைக்கப்படவில்லை. சில அரசியல் கட்சிகள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க தயங்குவதும் விருப்பமில்லாமல் இருப்பதும் தெளிவாகியது. மாநாட்டில் பங்கேற்ற சில அரசியல் கட்சிகள் அவநம்பிக்கையை மனத்தில் வைத்துக்கொண்டு இதில் பங்கேற்றன. கடந்த காலங்களில் நடந்த சில சர்வகட்சி மாநாடுகளில் அவர்கள் பெற்ற அனுபவம் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

இனியாவது நாம் இந்த நிலையை மாற்றுவோம். அரசின் அனைத்து செயல்பாடுகளையும் எதிர்ப்பது தான் எதிர்க்கட்சியின் பங்கு என்று நினைக்கும் மரபிலிருந்து விடுபடுவோம். எதிர்கட்சிகளின் கருத்தை பொருட்படுத்தாமல் செயல்படும் வழக்கத்திலிருந்தும் விலகி இருப்போம். நாம் அனைவரும் நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் செயல்படுகிறோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய பாதையில் முன்னேறினால் மட்டுமே நம் நாட்டை முன்னேற்ற முடியும். அந்த புதிய பாரம்பரியத்தை உருவாக்க நாங்கள் பாடுபடுகிறோம்.

நான் எப்பொழுதும் வலியுறுத்தும் ஒரு விடயத்தை இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். கடந்த காலத்தை கிளறிக் கொண்டிருக்காமல், எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்போம். உங்களுக்கும் எனக்கும் கசப்பான அனுபவங்கள்உண்டு. அது உண்மை. ஆனால் அவற்றை பற்றி பேசிக் கொண்டிருக்காமல் எதிர்காலத்தைப் பற்றி ஆராய வேண்டும். நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து, நேர்மையான நோக்கத்துடன் ஒன்றிணைந்து பொதுவான முடிவை எடுப்போம்.

13ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகளை அமுல்படுத்துவதில் கடந்த 36 வருடங்களாக நாம் வெற்றி பெற்றுள்ளோமா? தோல்வியடைந்தோமா? அவ்வாறு வெற்றி பெறவோ தோல்வியடையவோ காரணங்கள் என்ன? நாம் இதைப் பற்றி பேசலாம். கலந்துரையாடுவோம். ஆழமாகப் நோக்குவோம். உலகின் புதிய போக்குகளைப் ஆராய்வோம்.

நமது பிராந்தியத்தில் இந்தியா மற்றும் சீனா போன்று மேற்கு நாடுகளான அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய பெரிய நாடுகளும் அதிகாரத்தை பரவலாக்கியுள்ளன. மேலும், பிரித்தானியா, நெதர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளும் அதிகாரத்தை பரவலாக்கியுள்ளன.

சீனாவிலிருந்து ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறேன். சீனாவின் சிறுபான்மையினர் மொத்த மக்கள் தொகையில் 9 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளனர். ஆனால் அவர்கள் இந்த சிறுபான்மையினருக்கு வலயங்கள், கோரளைகள் மற்றும் மாநகரங்கள் போன்ற பல நிர்வாகக் கட்டமைப்புகளில் தன்னாட்சி அதிகாரங்களை வழங்கியுள்ளனர்.

தேசியக் கொள்கையின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் ஊடாக, உலகின் பல்வேறு நாடுகள் வெற்றி பெற்றுள்ளன. அந்த நாடுகளில் இருந்து படிப்பினை பெறுவோம். அதையெல்லாம் கருத்தில் கொண்டு நமது நாட்டிற்கு மிகவும் பொருத்தமான கட்டமைப்பை அடையாளம் காண்போம்.

மாகாண சபைகளுக்காக வருடத்திற்கு சுமார் 550 பில்லியன் ரூபாவை செலவிடுகிறோம். இந்த பணத்திற்கு மாகாண சபைகளினால் நியாயம் நடந்துள்ளதா? இந்த பணம் மக்கள் நலனுக்காக பயன்படுத்தப்பட்டதா? நாம் கவனம் செலுத்த வேண்டிய முக்கியவிடயமிது.

இலங்கையில் உள்ள ஒவ்வொருவரும் மாகாண சபையை பராமரிக்க 22,000 ரூபாவை செலவிடுகின்றனர். நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒரு மாகாண சபையை பராமரிக்க 88,000 ரூபாவை செலவிடுகிறது. அந்த பணத்திற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு பலன்கள் கிடைக்கிறதா? பல்வேறு அரசாங்கங்கள், (10ம் பக்கம் பார்க்க)

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்**
**423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்**
**29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை**
**தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
**416 755 5544**

# தமிழர் பிரதேசங்களை திட்டமிட்டு பௌத்த இடங்களாக பிரகடனப்படுத்துவது வேதனைக்குரியது- இந்துமாமன்றம்




இலங்கையில் உள்ள தமிழர் பிரதேச இடங்களை திட்டமிட்டு பௌத்த இடங்களாக பிரகடனப்படுத்துவது வேதனைக்குரியது என இந்து சமய சங்கங்கள் மற்றும் அறக்கட்டளைகளின் கூட்டமைப்பு சார்பாக அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு தமிழர்களின் பாரம்பரிய அடையாளச் சின்னங்களை பௌத்த அடையாள இடங்களாக மாற்ற நினைப்பது மிகுந்த வேதனை தருகிறது. கிழக்கில் திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று சைவ மக்களின் புனித தீர்த்தமாக பலநூறு வருடங்களாக பேணிப்பாதுகாக்கப்பட்டது.

சைவசமயத்தை பெரிதும் நேசித்த இலங்கை வேந்தன் இராவணனோடு தொடர்புடைய இப்புனித தீர்த்தம் இன்று தொல்லியல் திணைக்களத்தின் பெயரால் அபகரித்துள்ளமை அநீதியான செயலாகும். தொடர்ந்து தொன்மை வாய்ந்த சைவ ஆலயங்களை திட்டமிட்டு அபகரிக்க நினைப்பது அதர்மச் செயலாகும்.

தற்போது பறளாய் முருகன் கோவிலில் உள்ள அரசமர விருட்சத்தை சங்கமித்தை வரலாற்றோடு தொடர்புபடுத்தி வர்த்தமானி வெளியிட்டுள்ளமை சைவ மக்களுக்கு பேரதிர்ச்சியை தந்துள்ளது. சைவ நிறுவனங்களையோ, வடக்கில் உள்ள பல்கலைக்கழக அறிஞர்களையோ தொடர்பு கொள்ளாமல் தொல்லியல் திணைக்களம் புதிய பிரகடனங்கள் செய்வது கவலையளிக்கிறது. கீரிமலைப் புனித தீர்த்த கேணியை திடீரென தொல்லியல் திணைக்களம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிப்பது மிகவும் தவறான செயலாகும்.

தெல்லிப்பழை கிராம முன்னேற்றச் சங்கம், வல்லிபுரம் என்ற பெரியவரின் நிதியுதவியுடன் 1916ஆம் ஆண்டு தூர்வைக் குளமாக இருந்த இக் கேணியை பொலிகலால் கட்டி பாதுகாத்தது. இன்று வரை வலிவடக்குப் பிரதேசசபை குளத்தைப் பாதுகாப்பதுடன் காவலர்களை நியமித்து கண்காணித்து வருகிறார்கள்.

திணைக்களத்திற்கு உரித்தாக பிரகடனம் செய்திருப்பது நீதியற்ற செயல். எனவே ஜனாதிபதி தொல்லியல் திணைக்களத்தின் மேற்குறித்த பிரகடனங்களை மீளப் பெறுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சைவமக்களின் சார்பில் அகில இலங்கை இந்து மாமன்றம் தங்களிடம் தெரிவித்துக் கொள்கிறது. தாங்கள் இவ்விடயத்தில் உடன் அக்கறை எடுத்து ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம் என்றுள்ளது

## அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ்

தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வுகளும் ஆடையாளப்படுதல்களும் இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களினதும் கலாசார தொன்மைகளையும் வரலாறுகளையும் பேணிப் பாதுகாப்பதாக அமைய வேண்டுமே தவிர, எரியும் நெருப்பிற்கு எண்ணை ஊற்றுவதாக அமையக் கூடாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த 07 ஆகஸ்ட் 2023 திங்கட்கிழமை இடம் பெற்ற அமைச்சரவை கூட்டத்திலேயே கடற்றொழில் அமைச்சர், தன்னுடைய கருத்துக்களை பதிவு செய்துள்ளார்.



சுழிபுரம் பறாளை முருகன் ஆலயம் உட்பட யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் 3 தொல்லியல் திணைக்களத்திற்கு உரிய பகுதியாக அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமையை சுட்டிக் காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த பகுதிகளை தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தும் செயற்பாடானது உரிய வழிமுறைகளை பின்பற்றப்படாமல் மேற் கொள்ளப்பட்டிருப்பதை தன்னால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில், அனைத்து மக்களும் கௌரமான உரிமைகளை பெற்று வாழும் சூழலை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற சூழலில், (20ம் பக்கம் பார்க்க)



றொரன்றோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்று வழமையான பூஜை வழிபாடுகள் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

புதிய முகவரி

104 Rivalda Rd
Northyork - On - M9M 2M8
(Weston/Sheppard)

இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

# 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இந்திய மத்திய அரசு தவறி விட்டது - டி.ஆர்.பாலு

இலங்கையில் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி இந்திய மத்திய அரசாங்கம் தவற விட்டது என திமுகவின் நாடாளுமன்ற உறுப்பினர் டிஆர் பாலு தெரிவித்துள்ளார்.



இந்திய மத்திய அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான விவாதம் இடம் பெற்று வரும் நிலையில் அதில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்பதில் இந்திய அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கு பிரதமர் எதுவும் செய்யவில்லை. தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் மத்திய அரசு நடத்தி வருகிறது.

பிரதமர் நரேந்திரமோடி எங்கு சென்றாலும் திருக்குறள், திருவள்ளுவர் பற்றி பேசுகிறார் ஆனால் தமிழ்நாட்டிற்கு பிரதமர் எதுவும் செய்யவில்லை

நாடாளுமன்றத்துக்கு பிரதமர் நரேந்திர மோடியை வர வைக்க வேறு வழி இல்லாததால் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்துள்ளோம்.

இலங்கையில் 13-வது சட்டத் திருத்தத்தை அமல்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வில்லை.

பெரும்பான்மை மக்களை வைத்து சிறுபான்மையின மக்களின் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. முன்பு குஜராத்தில் நடந்தது போல இப்போது மணிப்பூரில் நடக்கிறது. எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# இலங்கையில் சிறைகளில் 56 மத குருமார்கள்!

சிறுவர் மற்றும் பாலியல் வன்கொடுமை, நிதி மோசடி, புதையல் தோண்டல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புப்பட்டுள்ள 56 மதகுருமார்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 08 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க் கிழமை வாய்மூல விடைக்கான வினாக்களின் போது பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் உரையாற்றிய தாவது,

2023 ஜீன் 01 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் பல்வேறு 56 மதகுருமார்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 29 பௌத்த தேரர்கள், 03 இந்து குருமார்கள், 02 மௌலவிகள் கைதிகள் என்ற அடிப்படையிலும், 19 பௌத்த தேரர்களும், 01 கத்தோலிக்க மதகுருக்கள் சந்தேகத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் 19 பௌத்த தேரர்களும், ஒரு இந்து குருக்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பெண் பாலியல் குற்றச்சாட்டில் 03 பௌத்த தேரர்களும் சிறையில் உள்ளார்கள். கத்தோலிக்க, இந்து மற்றும் இஸ்லாம் மத குருமார்கள் பெண் பாலியல் குற்றச்சாட்டில் சிறையில் இல்லை.

அத்துடன், மனித படுகொலை குற்றச்சாட்டில் 2 பௌத்த தேரர்களும் 01 இந்து குருக்களும் உள்ளனர். 01 கத்தோலிக்க மத குரு சந்தேகத்தின் அடிப்படையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். நிதி மோசடி குற்றச்சாட்டில் 2 தேரர்களும், 1 இந்து மதகுருக்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 03 பௌத்த தேரர்கள் சிறையில் உள்ளனர். கொடூர பாலியல் குற்றச்சாட்டுடன் 02 பௌத்த தேரர்கள் சிறையில் உள்ளார்கள்.

இந்து, முஸ்லிம், கத்தோலிக்க மதகுருமார்கள் இந்த குற்றச்சாட்டுக்குள் உள்ளடங்கப்படவில்லை. சிறுவயது பிள்ளைகள், ஆண் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் 20 பௌத்த தேரர்களும், 01 இந்து மதகுருக்களும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதற்கமைய சிறைச்சாலைகளில் 48 பௌத்த தேரர்களும் 03 இந்து குருக்களும் 01 மௌலவிகளும், 04 கத்தோலிக்க மதகுருமார்களும் சிறைக்கைதிகளாக உள்ளனர்.

# உங்களது காலத்திலேயே தீர்வைக் காணுங்கள்! இல்லையேல் எதிர்காலச் சந்ததி பாதிக்கப்படும்



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு உங்களின் காலத்தில் தீர்வு காணுங்கள். இல்லையென்றால் எமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் உட்பட எதிர்கால தலைமுறையினர் பாதிக்கப்படுவார்கள். அவ்வாறு நிகழ்ந்தால் நீங்கள் வாழ்ந்தாலும், இறந்தாலும் நிம்மதியாக இருக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நோக்கி குறிப்பிட்டார்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தில் 09 ஆகஸ்ட் 2023 புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையாற்றினார். இதனை தொடர்ந்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் உரையாற்றியதாவது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்துள்ள யோசனைகளை மீளாய்வு செய்வதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். சாதக மற்றும் பாதக விடயங்களை ஆராய்ந்து ஒரு தீர்மானத்தை அறிவிப்போம். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நாங்கள் கொண்டு வரவில்லை நீங்கள் தான் (ஜனாதிபதியை நோக்கி) கொண்டு வந்தீர்கள். இந்தியாவின் முன்னாள் பிரதமர் ரஜீவ் காந்தியுடன் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது நான் உட்பட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புறக்கோட்டை அரச மரத்தடியில் போராட்டத்தில் ஈடுபட்டோம். போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பலர் இன்று உயிருடன் இல்லை.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு உங்களின் காலத்தில் (ஜனாதிபதியை நோக்கி) தீர்வு காணுங்கள். இல்லையென்றால் எங்களை போல் எமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளும் எதிர்காலத்தில் தாக்குதலுக்கு உள்ளாகலாம். அவ்வாறு இடம் பெற்றால் நீங்கள் வாழ்ந்தாலும், இறந்தாலும் நிம்மதி இல்லாமல் போகும். ஆகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காணுங்கள் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன் என்றார்.

இதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மையினமாக வாழும் சிங்களவர்களின் பிரச்சினைகள் குறித்து சபையில் பேசுவது இல்லை. தமிழ், முஸ்லிம் சமூகத்தினரின் பிரச்சினைகள் குறித்து அவதானம் செலுத்துவதை போல் சிங்களவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்துங்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசியல் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன்.

இவர் இன்று தான் பிரச்சினைகள் தொடர்பில் ஆரம்பித்துள்ளார். ஆகவே சிங்களவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம். பிரச்சினையொன்றும் இல்லை என பதிலளித்தார்.

# அமித் ஷாவின் கூற்று

அமித் ஷா தற்போது இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் சக்தி வாய்ந்த தலைவர். மோடிக்கு அடுத்த நிலையில் நோக்கப்படுபவர். ஆனால், மோடியின் கவர்ச்சி இல்லாவிட்டால் அமித் ஷா இல்லை.

பாரதிய ஜனதா கட்சியின் ஜனவசியம் - நம்பிக்கை - முகம் அனைத்தும் தற்போதைய நிலையில் மோடி மட்டும் தான். மோடிக்கு பதிலாக பிறிதொருவரை காண்பிக்கக்கூடிய நிலையில் பாரதிய ஜனதா கட்சியில்லை.

இவ்வாறானதொரு நிலையில் பாரதிய ஜனதா கட்சியின் இரண்டாம் நிலை தலைவரான அமித் ஷா இராமேஸ்வரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது ஈழத் தமிழ் மக்கள் பெரும் கொலைக்கு ஆளாகினர் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இதனை ஓர் அரசியல் பிரசார உக்தியாக நோக்குவதா அல்லது இந்தியாவின் நீண்டகால அரசியல் நகர்வுகளுக்கான மூலதனமாகக் கொள்வதா? இங்கு கவனிக்க வேண்டிய விடயம், இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இது தொடர்பில் வாய் திறக்கவில்லை. ஆனால், இதே அலி சப்ரி கனடிய பிரதமரின் கூற்றுக்கு உடனடியாகவே கண்டனம் தெரிவித்திருந்தார்.

ஆனால், பலமான நிலையிலிருக்கும் பாரதிய ஜனதா கட்சியின் அமித் ஷாவின் கூற்றுக்கு எதிர்வினையாற்ற சப்ரியால் முடியவில்லை. மேலும் சப்ரி ஓர் இஸ்லாமியர். இறுதி யுத்தம் இடம் பெற்ற போது, காங்கிரஸ் கட்சியே ஆட்சியிலிருந்தது.

அதே போன்று தமிழ் நாட்டில் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் (தி. மு. க.) இருந்தது. இந்த இரண்டுக்கும் எதிராகவே பாரதிய ஜனதா கட்சி தமிழ்நாட்டுக்கான தேர்தல் வியூகங்களை அமைத்திருக்கின்றது. இறுதி யுத்தத்தின் போது, தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர், அதனை காங்கிரஸூம் அதனோடு கூட்டணி அமைத்திருந்த திராவிட முன்னேற்றக் கழகமும் தடுக்கத் தவறி விட்டன

அந்த வகையில் ஈழத் தமிழ் மக்களின் கண்ணீருக்கு இவர்களும் பொறுப்பாளிகள் - என்றவாறான ஒரு பிரசாரத்தை ஏற்கனவே, பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டு தலைவர் அண்ணாமலை முன்னெடுத்து விட்டார். அதற்கு பலம் சேர்க்கும் வகையிலேயே அமித் ஷா, தற்போது இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கின்றார். இது மட்டும்தான் விடயமென்று கருதி விடலாமா?

இந்தியாவை பொறுத்தவரையில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருந்தாலும் இல்லா விட்டாலும் கூட அது ஒரு தனிப்பெரும் கட்சியென்னும் நிலையை எய்திவிட்டது. அதனோடு ஒப்பிட்டால் இந்தியாவில் பிறிதொரு தனிப்பெரும் கட்சி இல்லை.

எனவே, தனியாக அல்லது கூட்டாக ஆட்சியை கைப்பற்றும் தகுதியுள்ள பிரதான கட்சி அது மட்டும் தான். பாரதிய ஜனதாவை வீழ்த்துவதற்கு அனைவரும் சேர வேண்டியிருப்பதிலிருந்தே இந்த யதார்த்தம் தெளிவாக தெரிகின்றது.

இதேவேளை, பாரதிய ஜனதா கட்சியும் அதன் முதுகெலும்பாக செயல்படும் ஆர். எஸ்.எஸ். இயக்கமும் இந்துத்வா இலக்கொன்றை கொண்டிருக்கின்றது. அந்த இலக்கென்பது, வெறுமனே இந்தியாவுடன் மட்டுப்பட்ட ஒன்றல்ல. அது அகண்ட பாரதம். இவ்வாறான இலக்கு இந்தியாவில் வேறு எந்தவொரு கட்சிக்கும் கிடையாது.

இந்த நிலையில் அயல் நாடுகளிலுள்ள இந்து மக்கள் மீதான செல்வாக்கை தக்க வைக்கும் உக்திகள் தொடர்பிலும் பாரதிய ஜனதா சிந்திக்காமல் இருக்குமென்று கருதினால் அது தவறாகும்.

அமித் ஷாவின் கூற்றை இந்தப் பின்புலத்திலும் நோக்க வேண்டும். எவ்வாறெனினும், ஈழத் தமிழ் மக்கள் பெருந்தொகையில் கொல்லப்பட்டனர் - என்னும் கருத்து நமக்கு அருகாமையிலுள்ள பிராந்திய சக்தியொன்றை ஆளும் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர் ஒருவரால் சுட்டிக்காட்டப்படுவதான ஈழத் தமிழ் மக்களுக்கு அநீதியொன்று இடம் பெற்றிருக்கின்றது என்பதை ஏனையவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு பயன்படலாம்.

# 13 குறித்த அரசாங்கத்தின் திட்டம் என்ன? அரசாங்கத்திடம் சிங்களத் தலைவர்கள் கேள்வி!



13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் யோசனையை கோரியுள்ள அரசாங்கத்தின் திட்டம் என்னவென்று ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது. 13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக அரசியல் கட்சிகள் தமது பரிந்துரைகளை முன்மொழிவுகளையும் முன் வைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிகளுக்கு அறிவித்துள்ளார்.

குறித்த அறிவிப்புக்கு பதிலளிக்கும் போதே ஐக்கிய மக்கள் சக்தி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அக்காட்சியினுடைய பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார,

13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக அரசாங்கம் அரசியல் கட்சிகளுடைய யோசனையை கோரியுள்ளது. அதற்கு முன்னதாக இந்த விடயத்தில் அரசாங்கம் எவ்விதமான இறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி அரசியல் கட்சிகளின் யோசனையை கோருவதற்கு முன்னதாக அவர் தலைமையிலான அரசாங்கம் எவ்விதமான இறுதி முடிவை எடுத்துள்ளது என்பதை முதலில் எமக்கு அளிக்க வேண்டும்.

அதனடிப்படையிலேயே நாம் எமது யோசனைகளை முன் வைக்க முடியும். 13ஆவது திருத்தச் சட்ட விடத்தில் மட்டும் அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் யோசனைகளை பெறுவதற்கு முனைவது வழமைக்கு மாறானதொரு விடயமாகும். ஆகவே, இந்த விடயத்தில் அரசாங்கம் தனது யோசனைகளை முன்வைக்கின்ற பட்சத்தில் அது தொடர்பில் நாம் எமது நிலைப்பாடுகளையும் முன்மொழிவுகளையும் வெளிப்படுத்துவதற்கு தயாராக இருக்கிறோம் என்றார்.



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தற்பொழுது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான நாடகத்தையே சர்வகட்சி கூட்டத்தை மையப்படுத்தி முன்னெடுத்து வருகிறார். இதற்கு நாம் துணை போக முடியாது. 13ஆவது திருத்த சட்டம் சம்பந்தமாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்துகின்ற பொழுது அது சம்பந்தமான பரிந்துரைகளை செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வ மாநாட்டில் பங்கேற்பதை தவிர்த்துள்ள மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமான பரிந்துரைகளையும், முன்மொழிவுகளையும் முன் வைக்கும் கோரிக்கைக்கு பதிலளிக்குமா என்று வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தியே அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறார்.

அதன் ஒரு அங்கமாகவே சர்வகட்சி மாநாட்டை கூட்டி தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை வழங்க போவதாகவும் அதற்கு அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவையும் கோருவதாகவும் தெரிவிக்கின்றார். அந்த வகையில் 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் யோசனைகளை அவர் தற்போது கோருகினறார். ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் என்ன நிலைபாட்டை கொண்டிருக்கின்றது என்பது பகிரங்கப்படுத்தப்படவில்லை. அரசாங்கத்துக்குள் இந்த விடயம் சம்பந்தமாக முரண்பாடான நிலைமைகள் இருக்கின்றன. அது பகிரங்கமான விடயம்.

அவ்வாறிருக்கையில் எதிர்க்கட்சிகளிடமே ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் கடன் மறு சீரமைப்பு, நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்தல் போன்ற விவகாரங்களில் அரசாங்கமாகவே தீர்மானம் எடுக்கப்பட்டது. அப்போது எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை கோரவில்லை.

இந்நிலையில் 13ஆவது திருத்தச் சட்ட விடயத்தில் மாத்திரம் எதற்காக அரசாங்கத்தின் முடிவை அறிவிக்காது எதிர்கட்சிகளின் நிலைப்பாட்டை கோருகின்றார் என்பதே இங்குள்ள பிரதான விடயமாகும்.

எம்மை பொறுத்தவரையில் 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்துகின்ற பொழுது நாம் எமது பரிந்துரைகளையும் கருத்துகளையும் முன்வைப்பதற்கு தயாராக இருக்கிறோம். அதனை விடுத்து ஜனாதிபதியின் ஏமாற்று நாடகங்களுக்கு நாம் துணை போகப் போவதில்லை என்றார்.

இதேவேளை 13ஆவது திருத்தம் பற்றி சிங்கள தலைவர்கள் சாதகமாக சிந்திக்கிறார்கள் என நாம் கொள்ளலாம். ஆனால், தமிழ் அரசியல்வாதிகளை பற்றி தெரியாது. இன்று ஒன்று நாளை ஒன்று சொல்வார்கள் - இவ்வாறு தமிழ்மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். அத்துடன், சமஷ்டியை கோருகின்ற தமிழ்த் தரப்புகள் அதனை எவ்வாறு அடையப் போகிறோம் என்று கேள்வி எழுப்பியுள்ளார்


## தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

# Math & Physics Tutoring

**(For High School Students)**



**Special Classes for IB, AP & University Students**
**Math: Grade 9-12, Advanced Functions,**
**Calculus & Vectors and Data Management.**
**Physics: Grade 11 & 12**

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

**Instructor: S. Elancheliyan,** B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

**சி.இளஞ்செழியன்**

**Tel: 416-524-0424**

# கறுப்பு யூலை:- 40 நினைவுகள் ஈழப்போர் அழித்ததும் அளித்ததும்



**- வேதநாயகம் தபேந்திரன் -**

இலங்கைத் திருநாட்டில் தமிழர்கள் தனிநாடு கோரிய ஆயுதப் போராட்டம் மூன்று தசாப்தகாலம் நடந்தது. இதை ஈழப்போர் என்றார்கள்.

இப் போர் தமிழர்களது வாழ்க்கைக் கட்டமைப்பில் பல வித பாதகங்களையும் அதே வேளையில் நன்மைகளை யும் செய்துள்ளது. அதனையே ஈழப்போர் அழித்ததும், அளித்ததும் என்ற தலைப்பில் இங்கு பட்டியல் இட்டுள்ளேன்.

### ஈழப்போர் அழித்தது

.01. மீளப்பெற முடியாத மனித உயிர்கள் பல்லாயிரம் போனது. உடல் அவயங்களை இழந்தோர் தொகையும் பல்லாயிரம். ஏட்டிக்குப் போட்டியான மனிதக் கொலை கள், கூட்டுக் கொலைகள் நடந்தன. விதவைகள், தபுதாரன்கள், ஊனமுற்றோர், ஆதரவற்ற சிறார்கள், ஆதரவற்ற மூத்தோர் என நலிவுற்ற பெரியதொரு சனத்தொகை நாட்டில் உருவானது.

02. போரில் ஈடுபட்ட தரப்பினரால் காணாமல் ஆக்கப் பட்டோர் தொகை பல்லாயிரம் பேர் வரையில் வரும். இதன் துயரத்தின் வலி நீளமானது.

03. ஒரே ஊரில் மகிழ்வாக வாழ்ந்த குடும்ப வாழ்க்கை சிதறிப் போனது. ஒரு தாய், தந்தையரின் பிள்ளைகள் போருக்கென்றும் புலம்பெயர்வுக்கென்றும் பிரிந்து போனார்கள்.

04. படை முகாம்கள் உருவான போது பாதுகாப்புக் காகப் பெரும் நிலப்பரப்புகள் கையகப்படுத்தப்பட்டன. இதனால் தமது தாய் மண்ணை இழந்து 30 வருடங் களுக்கு மேலாக இடம் பெயரவோ புலம்பெயரவோ வேண்டி ஏற்பட்டது. தாய் மண்ணைக் காணாமல் கண்மூடி மண்மூடிப் போனோர் பல்லாயிரம் பேர்.

05. சிறுகச் சிறுக வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிக் கட்டிய வீடு வாசலைக் கைவிட்டு இடம் பெயரும் போது மனம்பட்ட வேதனைக்கு மருந்து இல்லை. கண்முன்னால் வீடு சிதறிய போது அதனைக் காணச் சகிக்காது அழுது புலம்பிய வேதனையை என்ன வென்று சொல்வது. ஏக்கத்தில் உயிர்விட்டோரதும், நோயாளியாகியோரதும் தொகை கணக்கு வழக்கு இல்லை.

06. விளைதிறன் மிக்க, வாழ்வு தந்த மண் உயர் பாது காப்பு வலயமென்று தடுக்கப்பட்டது. அதன் பயனைப் பெற முடியாமல் வறுமையில் வாடினார்கள்.

07. அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப் பாடு வந்து 10 ரூபாப் பொருளுக்கு 300 ரூபா கொடு த்து உழைப்பின் பெரும்பகுதியை வீணாகச் செல வழித்தார்கள். செலவழிக்க முடியாமல் வறுமையில் வாடினார்கள். மின்சாரத்தை, எரிபொருளைக் காணாமல் வருடங்கள் நீண்டன.

08. சொந்த வீட்டை விட்டு இடம் பெயர்ந்து இரவல் கொடியில் அல்லது முகாமில், அல்லது மரநிழலில் குடியிருந்து பட்ட வேதனைகள் ஏராளம்.

09. தரமான மருத்துவம் கிடைக்காமல் நொந்து பட்டோர், உயிரிழந்தோர் பல்லாயிரம்.

10. இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசம், கட்டுப்பாடற்ற பிரதேசம் என பிரதேசங்கள் இரு வகைப்பட்டன. ஓரிரு மணி நேரப் பயணத்திற்குப் பல நாள்கள் சென்றது. 50 ரூபாப் பயணத்திற்கு 5000 ரூபா செலவானது. கப்பல் விமானம் ஏறிக் காலங்கள் பல கடந்தன.

11. ஊரடங்குச் சட்டம், சுற்றிவளைப்பு என்று வாழ்வின் பெறுமதியான மணித்துளிகள் விரயமானது. .கைது கள், மறியல் எனச் சில ஆயிரம் பேரது வாழ்க்கை தொலைந்தது.

12. அறிவில், சேவையில் மேம்பட்ட மனிதர்களது உயிர்களைப் போர் தின்றது.வரலாற்றுப் பொக்கிசமான பொருள்கள், கட்டிடங்கள் பல அழிந்தன.

13. தமிழர்களின் மரபுத் தொன்மைகள்,நிலங்கள் பறி போய் பேரினவாதக் குடியேற்றங்கள் வந்தன.

14. உறவுகள் பாவமென வெளிநாடுகளில் உழைத்து நிறையக் காசு அனுப்பினார்கள். அதனை வீண் விரயம் செய்தோர் பலர். பொருளாதாரப் பயன்தராமல் ஏராளம் காசு முடங்கியது.

15. ஒரே உறவு, ஒரே நண்பர்கள். ஆனால் ஒவ்வொரு இயக்கமாகப் பிரிந்து நின்றார்கள். பகைமைப்பட்டார் கள். ஆளையாள் கொல்லும் நிகழ்வுகளும்,காணாமல் ஆக்கப்படும் நிகழ்வுகள் நடந்தன.

### ஈழப்போர் அளித்தது

01. அரசியல்,பொருளாதாரப் புலம்பெயர்வால் ஐந்து கண்டங்களிலும் தமிழினம் குடியேறியது. அந்நியசெலா வணி தாய் மண்ணின் வாழ்க்கைக் கோலத்தை மாற்றியமைத்தது. ஏராளம் பேர் வறுமையிலிருந்து மீண்டார்கள். புதிய பணக்காரர்கள் உருவானார்கள்.

02. பொருளாதார,சமூக ஒடுக்குமுறைக்கு உள்ளாகி யிருந்த தாழ்த்தப்படும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வளர்ந்த நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தார்கள். கடுமை யாக உழைத்துப் பெரும் செல்வம் தேடித் தாயகத்தில் அவர்களது உறவுகள் உயர்ந்தார்கள்.



03. வெளிநாட்டுப் பணத்தின் வருகையால் கோயில்கள் பிரமாண்டம் கண்டன. பிராமணர்கள் பொற்சிறை யிலிருந்து பெருமளவுக்கு விடுதலை பெற்றார்கள்.

04. கிடுகுக் கொட்டில் வாசிகசாலைகள், சின்னம் சிறிய கோயில்கள், எல்லாம் பென்னாம் பெரிதாக விஸ்வரூபம் எடுத்தன.

05. கொடிகாமத்துக்கு அங்கால கறுப்பா சிவப்பா எனத் தெரியாமல் வாழ்ந்த ஏராளம் பேர்கள் நாட்டின் நாலா திசைக்கும் சென்றார்கள். இந்தியா, மலேசியா, சிங்கப் பூர், ஐரோப்பா, கனடா,அமெரிக்கா, அவுஸ்திரேலியா எனச் சென்றார்கள். வந்தார்கள். வசித்தார்கள்.

06. உடுத்த உடுப்புக்கு அடுத்த உடுப்பு இல்லை. தங்க நகை காணாத தேகம் எனும் நிலைகள் யாவும் பெரு மளவு தகர்ந்தன.

07. போர்தந்த இடம் பெயர்வு, புலம்பெயர்வு என்பவை சகமனிதனைப் பெருமளவில் ஏற்றுக் கொள்ளும் பக்கு வத்தைத் தந்தது. சாதியம் என்பதன் கூர்முனை பெரு மளவுக்கு மங்கியது.

08. ஒரு ஊருக்குள் ஒரு உறவுக்குள் முடங்கிக் கிடந் தோர் யாதும் ஊரே யாவரும் கேளீர் எனப் பரவி விரவினார்கள். பல ஊர்களில் பல உறவுகள்.

09.பெரும் பணக்காரப் பொருள்களாக இருந்த தொலைபேசிகள், மின்னியல் சாதனங்கள் எல்லாம் கைக்குக் கை ரகம் ரகமாகச் சுழலும் நிலை வந்தது.

10. புட்டும் சம்பலும் உண்ட பலர் பிஸ்ஸா, கேஎவ்சி, மக்டொனால்ட்ஸ்,பேகர் என வகைவகையாக உண் ணும் நிலை வாய்த்தது. பூலோகத்தின் நவீனங்கள் யாவும் உள்ளங்கைக்கு வந்தன.

11. சீதனம் இருந்தால் தான் திருமணம் என்ற நிலை பெருமளவில் தகர்ந்தது. வடிவான பெண்களிடம் ஒரு சதம் வாங்காமல் பல இலட்சம் செலவழித்து வெளி நாட்டு ஆண் திருமணம் செய்தான். ஐந்து அழகான பெண் பிள்ளைகள் பெற்ற தகப்பன் அரசன் ஆனான்.

12.அரசசார்பற்ற நிறுவனங்களின் வருகையால் கோடான கோடி ரூபாப் பெறுமதியில் கட்டிடங்கள், வாழ்வாதாரங்கள் உருவாகின.

13.புலம்பெயர் தேசங்களில் வசிக்கும் எம்மவர் அனுப் பிய பெருந்தொகைக் காசு போர்க் காலத்தில் பட்டினிச் சாவிலிருந்து எம்மவரை மீட்டது. அதே வேளையில் போருக்குப் பின்பான புனர்வாழ்வுக்கும் உதவியது. உதவுகிறது.

14. இனவன்முறைகளால் சிங்களப் பிரதேசங்களிலி ருந்துதமிழர்கள் ஓடினார்கள். வெளிநாடுகளில் தமிழர் கள் உழைத்த காசால் கொழும்பில் சிங்கள மக்கள் தமது வீடுகளைத் தமிழர்களுக்கு விற்று விட்டு உள்ளூருக்கு ஓடுகின்றார்கள்.

15. சைக்கிள் ஓடிய பெண்களைப் பார்த்துக் கூவடித் தார்கள். பின்னாளில் மோட்டார் சைக்கிள், கார் ஓடுமளவுக்கும், நிறையப் பேர் உத்தியோகம் பார்க்கு மளவுக்கும் பெண்கள் முன்னேறினார்கள்.

நன்றி:- தமிழர்தகவல் இதழில் 2023 ஆகஸ்ட்

## தமிழ்க்கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கட்சி களின் பரிந்துரைகளை ஜனாதிபதியின் செயலாளர் கோரியிருக்கின்றார். இதற்கான உடன்பாடு ஏற்க னவே சர்வ கட்சிக் கூட்டத்தில் எட்டப்பட்ட தாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒரு புதிய அரசியல் யாப்பு இல்லை.

எவ்வாறான தீர்வுகள் தொடர்பில் பேசுவதாக இருந்தாலும் அது ஒற்றையாட்சிக்குள் தான் பேசப்படும் இதுதான் ரணிலின் நிலைப்பாடு.

புதிய அரசியல் யாப்பின் மூலமான அரசியல் தீர் வொன்று சாத்தியமில்லை என்பதை இப்போது ரணில் புரிந்து கொண்டிருக்கின்றாரா அல்லது முன்னர் அதனை புரிந்திருந்தும் அமைதியாக இருந்தாரா? ஒருவேளை முன்னரும் அவர் இவ் வாறானதொரு நிலைப்பாட்டில் இருந்திருந்தால் புதிய அரசியல் யாப்பின் மூலம் பிரச்னைகளை தீர்க்க முடியுமென்று நம்பிய சம்பந்தனின் நிலைமை தான் பரிதாபத்துக்குரியது.

புதிய அரசியல் யாப்பு இல்லை. அதற்கான அழுத் தங்களும் வெளியிலிருந்து வரப்போவதில்லை. இந்த நிலையில் தமிழ்த் தேசிய கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? ஒன்றில் இந்த விடயத்திலி ருந்து முற்றிலுமாக வெளியேற வேண்டும். அல்லது தாங்கள் கோரும் தீர்வுக்காக ஜனநாயக ரீதியில் போராட வேண்டும்.

தங்களுடைய கட்சி ஆதரவாளர்கள் சிலரை அழைத்து பதாதைகளை உயர்த்திப் பிடிக்கும் போராட்டமல்ல இலட்சக்கணக்கான மக்களை திரட்டி தங்களின் சுகபோகங்களை இழந்துபோகும் வகையிலான போராட்டமாக இருக்க வேண்டும்.

வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் தங்களின் கொழு ம்பு வாழ்வை முற்றிலுமாகப் புறக்கணிக்கும் போராட்டமாக இருக்க வேண்டும்.

ஆந்திராவில் பொட்டி சிறிராமுலு உயிர் நீங்கும் வரையில் போராடியது போன்று போராட வேண் டும். ஆந்திர தனி மாநிலக் கோரிக்கையை முன் வைத்து போராடிய ராமுலு இறந்து மூன்றே தினங்களில் புதிய ஆந்திர மாநிலத்தை நேரு அரசாங்கம் அங்கீகரித்தது.

அது போன்று தமிழரின் ஜனநாயக போராட்ட த்தை கண்டு கொழும்பு கீழிறங்க வேண்டும் கூடவே இந்தியா மற்றும் மேற்கு உலகும் தமிழரை நோக்கி திரும்ப வேண்டும். அப்படி யானதொரு போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் தயாராக இருக்கின்றனரா? இதனை இலக்காகக் கொண்டு மக்கள் திரள்வார் களா?

செல்வநாயகம் காலம் அதன் பின்னர் அமிர்த லிங்கம் காலத்தில் கூட அவ்வாறானதொரு போரா ட்டம் இடம்பெறவில்லை. இந்த நிலையில் இப்போது இருப்பவர்களால் இப்படியானதொரு போராட்டத்தை கற்பனை செய்யக்கூட முடியாது.

இந்திய தூதுவருடன் அமெரிக்க தூதுவரிடம் பேசுவதிலும் பயனில்லை. அவர்களின் எல்லை என்னவென்பதை அவர்கள் கூறி விட்டனர். இந்தியாவின் நிலைப்பாடு மிகவும் தெளிவானது.

இந்தியாவின் நிலைப்பாட்டை சரியாகப் புரிந்து கொண்டே தனது புதுடில்லி பயணத்தை நிறைவு செய்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க உடனடியாகவே 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயம் தொடர்பில் பேசி வருகின்றார். கட்சிகளின் முன்மொழிவு கோரப்படுகின்றது.

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்திலேயே இழுபறிகள் காணப்படும் போது அதனைத் தாண்டிச் செல் வது எவ்வாறு? இந்தக் கேள்விக்கு நமது பக்கத் திலிருக்கும் பதிலோ இலகுவானது அதாவது சர்வதேச அழுத்தம் புவிசார் அரசியல் இவைகள் வாய்ப்பை வாரி வழங்கப் போகின்றது. அதனை பயன்படுத்திக் கொள்வதில் தான் விடயம் இருக் கின்றது.

# மாகாண சபைத் தேர்தலை நடத்தக் கோருவது பொருத்தமானது தவறினால் 13ஐ இழக்க நேரிடும் - தயான் ஜயதிலக்க



தற்போது அரசியலில் உள்ள தென்னிலங்கை முற்போக்கு சக்திகளும் எதிர்க் கட்சிகளும் வடக்கு கிழக்கு அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஆண்டு இறுதிக்குள் மாகாணங்களுக்கான தேர்தலை நடத்துமாறு ஏகோபித்த கோரிக்கை விடுப்பதே பொருத்தமான நடைமுறையாகும். தவிர்த்து நடைமுறைச் சாத்தியமற்ற நிபந்தனைகளை முன்வைப்பது 13ஆவது திருத்தச் சட்டத்தின் உள்ளீடுகளை இழக்கும் நிலைமைகளை உருவாக்கும் என்று இராஜதந்திரியும் அரசியல் விமர்சகருமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

இலங்கையில் நீண்ட வரலாற்றை கொண்டுள்ள தேசிய பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் கடந்தகால ஜனாதிபதிகள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி இருக்கிறார்கள். ஆனால், அவை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடைமுறைப் படுத்தப்பட்டதாக இல்லை. இவ்வாறானதொரு சூழலில் தற்பொழுது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அறிவித்திருக்கிறார்.

உண்மையில் தற்போதுள்ள யதார்த்த நிலைமையை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலமானது ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு முன்னதான வருடமாகும். அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வருடமாகும். ஆகவே இந்த காலப்பகுதிகளில் பிரதானமான விடயங்களை முன் நகர்த்துவதும் நடைமுறை சாத்தியமாகுவதும் மிகவும் கடினமான விடயமாகும்.

இவ்வாறான நிலையில் வட,கிழக்கு தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் உட்பட எதிர்கட்சிகள் நடைமுறை சாத்தியமான விடயத்தை வலியுறுத்துவது பொருத்தமானதாகும். அந்த வகையில் தற்போதைய அரசியல் சூழலையும் புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணை பெற்று அதிகாரத்தில் உள்ள ஒருவர் அல்ல. அவர் தனிநபராக கூட மக்கள் ஆணை பெற்று பாராளுமன்றத்திற்கு வருகை தந்திருக்கும் நபரும் அல்ல. அவ்விதமான நிலையில் அவரால் பிரதானமான விடயங்களை முன்னெடுப்பது சாத்தியமற்றதொன்றாகும்.

அதனடிப்படையில் அவர் இந்தியாவிற்கான விஜயத்தை நிறைவு செய்துள்ளார். இந்த விஜயத்தின் போது திருகோணமலை நகரத்தை மையப்படுத்திய அபிவிருத்தி திட்டங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதனை விட தமிழ் நாட்டையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்குரிய முதற் கட்ட நடவடிக்கைகளுக்கும் இணக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இப்பின்னணியில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு அவர் நடவடிக்கைகளை எடுப்பாராக இருந்தால் நிச்சயமாக தென்னிலங்கையில் அது பெரும் எதிர்ப்பு பிரசாரத்திற்கு வித்திடும். அது மட்டுமன்றி ஜனாதிபதி ரணில் அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பினைக் கொண்டிருக்கையில் சவால்கள் அதிகமுள்ள விவகாரத்தினை முழுமையாக முன்னெடுக்க முனைவது தனது வாக்குவங்கி அரசிலுக்கு பின்னடைவாக அமையும் என்பதிலும் கவனத்தைக் கொண்டிருப்பார்.

ஆகவே தற்போதைய சூழலில் நடைமுறைச் சாத்தியமான விடயத்தை முன்வைப்பதே பொருத்த மான அணுகுமுறையாகும். குறிப்பாக மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் சம்பந்தமாக நிபந்தனைகள் விதிப்பதை விடுத்து அவற்றுக்கான தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதியை வலியுறுத்துவதே பொருத்தமானதாகும்.

மாகாணங்களுக்குரிய மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்குரிய வழியை முதலில் உறுதிப்படுத்திக் கொள்வதோடு இந்த ஆண்டு உறுதிக்குள் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் தென்னிலங்கை முற்போக்கு சக்திகள் மற்றும் வட, கிழக்கு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து அழுத்தங்களை பிரயோகித்து அதில் வெற்றியடைவதே பொருத்தமான அணுகுமுறையாக இருக்கும்.

அதனை விடுத்து காணி,பொலிஸ் அதிகாரங்கள் சம்பந்தமாக நிபந்தனைகளை விதிப்பதும் 13க்கு அப்பால் செல்வது பற்றி உரையாடுவதும் இருப்பதையும் பறிகொடுப்பதற்கான நிலைமைகளையே தோற்றுவிக்கும்.

தற்போது 13ஆவது திருத்தச்சட்டத்தில் காணப்படும் பொலிஸ் அதிகாரத்தை நீக்குமாறு அரசியலமைப்பு திருத்த தனிநபர் பிரேரணையை முன்வைத்திருக்கின்றார். இத்தனிநபர் பிரேரணை சம்பந்தமாக பல்வேறு கருத்துக்கள் இருந்தாலும் தமிழ் அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக பொலிஸ், காணி அதிகாரம், சமஷ்டி கோரிக்கை என்பவற்றை முன்வைத்துச் செல்வதானது தென்னிலங்கையில் உள்ள எதிர்ப்புச்சக்திகள் வலுவடைவதற்கே வழிசமைக்கும். அந்த நிலைமையானது, சில அரசியல் சக்திகள் ஒன்றிணைந்து 13இல் உள்ள பொலிஸ் அதிகாரம் உள்ளிட்டவற்றை பாராளுமன்றத்தின் ஊடாக நீக்குவதற்கான சூழலைக் கூட உருவாக்கி விடும்.

அவ்விதமான நிலைமை ஏற்படுமாயின் அதிகாரப்பகிர்வுக்கான அடிப்படை விடயங்களையே இழக்க நேரிடும். அதனை மையப்படுத்தியே இந்த விடயத்தில் நகர்வுகளைச் செய்வதே முக்கியமானதாகும் என்றார்.

# 9 மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் நாட்டுக்கு அச்சமான நிலைமையை உருவாக்கும் -அலிசபரி



மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது நாட்டுக்கு அச்சமான நிலைமையை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி பாராளுமன்றின் ஊடாகவே இறுதி தீர்மனம் எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் உள்ள பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது தொடர்பில் எமக்கு தமிழ் மக்களுடன் எவ்விதமான பிரச்சினையும் இல்லை. ஆனால் தற்போதைய நிலையில் பொலிஸார் அரசியல் மயமாகியுள்ளதாக பொதுமக்கள் பாரிய குற்றச்சாட்டை சுமத்துகிறார்கள். அவ்வாறானதொரு நிலையில் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது பொருத்தமற்றதாகும். ஏனென்றால் ஒன்பது மாகாணங்களுக்கும் ஒன்பது முதலமைச்சர் இருப்பார்கள்.

அவர்கள் வெவ்வேறு கட்சிகளையும் பிரதிநிதித்துவம் செய்பவர்களாகவே இருப்பார்கள். பொலிஸ் அதிகாரத்தினை மாகாணங்களுக்கு வழங்குகின்ற போது அந்த முதலமைச்சர்களே பொலிஸாரை நிர்வாகம் செய்யும் நிலைமையே காணப்படும். தற்போது தேசிய ரீதியில் ஒரு பொலிஸ் கட்டமைப்பே காணப்படுகின்றது. இதன் போதே பொலிஸ் கட்டமைப்பு மீதான குற்றச்சாட்டுகள் இருக்கின்ற நிலையில் ஒன்பது மாகாணங்களும் பொலிஸ் அதிகாரத்தை கையாளும் போது நாட்டின் நிலை என்னவாகும் என்ற கேள்வி ஏற்படுகின்றது. ஆகவே, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதானது அச்சமான நிலையை ஏற்படுத்துகின்றது. எனவே, மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதித்தே இறுதி தீர்மானம் எடுப்பது பொருத்தமானதாகும் என்றார் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி.

# 13 குறித்த பரிந்துரைகளைச் செய்ய தமிழரசுக்கட்சி தீர்மானம்

13ஆவது திருத்தம் சம்பந்தமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கு தீர்மானித்துள்ளது. அத்துடன் விரைவில் சம்பந்தன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தம் சட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளை கோரியுள்ள நிலையில் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனுக்கும் அக்கட்சியின் வெளிவிகாரங்களுக்கான செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரனுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைவாக 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக தமிழரசுக்கட்சியின் பரிந்துரைகளை வரைவு செய்து அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த வரவு தயாரிப்பு பணிகளை சம்பந்தனின் வழிகாட்டலில் சுமந்திரன் முன்னெடுக்க உள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின் போது அதிகாரப் பகிர்வு, மாகாண சபை தேர்தல் சம்பந்தமான கலந்துரையாடல் சுமூகமற்ற நிலையில் நிறைவுக்கு வந்துள்ள சூழலில் அதுகுறித்து விரைவில் ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பொன்றை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த சந்திப்பில் சம்பந்தன் மட்டும் பங்கு பற்றுவதா இல்லை சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கு பற்றுவதா என்பது சம்பந்தமாக இது வரையில் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை.

# கனேடியப் பிரதமரின் மண முறிவு:- அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கை ஆட்சி நிர்வாகத்தின் பொருட்டானதா?

- சதீஷ் கிருஷ்ணபிள்ளை -

கனேடிய பிரதமரும் அவரது மனைவியும் தாம் பிரிவதாக கடந்த வாரம் அறிவித்தார்கள். இது பற்றிய செய்திக்கு ஊடகங்கள் அதிக முக்கியத்துவம் வழங்கியிருந்தன. கனடாவிலும் வெளிநாடுகளிலும் இரு வகையான எதிர்வினைகள். வெளிநாடுகளில், 'ஐயோ அற்புதமான தம்பதியாச்சே, ஏன் இப்படி? என்ன நடந்தது?' என்ற தொனியை காணக்கூடியதாக இருந்தது.

கனேடிய மக்கள், 'இது இருவரதும் தனிப்பட்ட விஷயம். நாம் மூக்கை நுழைப்பானேன்?' என்றவாறு பேசிக் கொண்டார்கள்.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 2005இல் சோபியாவை மணந்தார். தமது 18 வருடகால திருமண வாழ்க்கையில் இருவருக்கும் மூன்று பிள்ளைகள். காதல் திருமணந்தான். தனது தம்பியின் சினேகிதியாக அறிமுகமான பெண், பின்னாட்களில் பொது நிகழ்வொன்றில் ட்ரூடோவின் வாழ்க்கையில் குறுக்கிட்டார்.

தமது காதலை 31 வயதில் வெளிப்படுத்திய தருணத்தில், 'இத்தனை வருடங்கள் உனக்காகவே காத்திருந்தேன்' என ட்ரூடோ சொன்னதாக சோபியா கூறுவார். கடந்த வாரம் பிரிதல் பற்றி அறிவித்த போது தாம் மனமொப்பியே பிரிகிறோம் என்று இருவரும் கூறினார்கள்.

15 வயதில் மகன், 14 வயதில் மகள், ஒன்பது வயதில் கடைக்குட்டி மகன் ஆகிய மூவரினதும் நலனுக்காக தனிப்பட்ட வாழ்க்கையை மதிக்குமாறு பிரிந்து செல்லும் தம்பதியினர் கேட்டனர்.

உலக நாடுகளின் மக்கள் ட்ரூடோ தம்பதியின் பிரிவு பற்றிய செய்திக்கு சற்று உணர்ச்சிவசப்பட்டார்கள் என்றால், அதற்கு காரணம் இருந்தது. இந்த மக்களின் கண்களுக்கு ட்ரூடோ ஈர்ப்பு மிக்கவராக திகழ்ந்தார். அந்த மக்கள் அவரை ஆளுமை மிக்க உலகத் தலைவராக பார்த்தார்கள். இன்னும் சொல்லப்போனால், கனேடிய பிரதமருக்கு ஒரு திரை நட்சத்திரத்தின் புகழும் அந்தஸ்தும் இருந்தது. அவர் குடும்பத்தின் மீது காட்டிய பாசத்தை மக்கள் ரசித்தனர்.

இந்த ஆர்வம் காரணமாக ட்ரூடோ, சோபியா ஆகியோருக்கு இடையில் மணமுறிவு ஏற்படுவதற்குரிய காரணம் என்னவென்று அறிவதில் ஆர்வம் காட்டினார்க்ள.

கனேடிய மக்களைப் பொறுத்தவரையில், பிரதமரின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றி பெரிதாக அக்கறைப்பட வேண்டிய தேவை இருக்கவில்லை. அவர்களின் கலாசாரம் அப்படிப்பட்டது. பிரிவு, மணமுறிவு, சட்டப்படியான விவாகரத்து என்பதெல்லாம் அல்லோலகல்லோலப்பட வேண்டிய விஷயமல்ல. பலரது வாழ்க்கையில் நடப்பது தானே என்ற மனப்பாங்கு.

ஒரு பிரதமராக ட்ரூடோ ஆற்றும் காரியங்களில் பாதிப்பை ஏற்படுத்தாவிடின், இந்தப் பிரிவு பொருட்படுத்த தேவையில்லாத ஒன்றென்பது கனடாவின் பொதுக் கண்ணோட்டம்.

இந்தக் கண்ணோட்டம் நாட்டுக்கு நாடு மாறுபடலாம். ஒரு நாட்டில் சரியானதாகவும், இன்னொன்றில் தவறானதாகவும் பார்க்கப்படலாம்.

ஒரு நாட்டின் அரசியல், சமூக, கலாசார காரணிகள் அடிப்படையில், அரசியல்வாதியின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய கண்ணோட்டம் தீர்மானிக்கப்படுகிறது. சில நாடுகளில் தமது அரசியல் தலைவர் மிகவும் ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்பதில் அவரை தெரிவு செய்த மக்கள் இறுக்கம் காட்டுவார்கள்.



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன், வெள்ளை மாளிகை முன்னாள் ஊழியர் மொனிக்கா லெவின்ஸ்கி காதல் விவகாரத்தை ஞாபகப்படுத்தலாம். இது அமெரிக்க அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய விவகாரமாகும்.

இது மக்கள் மத்தியில் பில் கிளின்டனுக்கு இருந்த அபிமானத்தில் கறைபடியச் செய்ததுடன், அவரை அரசியல் குற்றப் பிரேரணை வரை இழுத்துச் சென்றது. பிரான்ஸ் போன்ற நாடுகளைப் பொறுத்த வரையில், இந்தப் பிரச்சினை வேறு விதமாகவே அணுகப்படும்.

தமது மனைவியை ஏமாற்றி நடிகையுடன் காதல் தொடர்பு பேணிய செய்தி அம்பலமானபோது ஜனாதிபதி பிரான்சுவா ஹொல்லந்தேயை மக்கள் வெறுத்தார்கள். முன்னைய ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோஸி விவகாரத்தில், பிரெஞ்சு மக்கள் அந்தளவிற்கு கடுமையாக இருக்கவில்லை. அவர் பாடகி கார்லா ப்ருணியுடன் தொடர்பில் இருந்த தகவல் அம்பலமானபோது, அவர் மீது மக்களுக்கு இருந்த ஆதரவு கணிசமாக வீழ்ந்ததை கருத்துக்கணிப்புகள் காட்டின.

எனினும், ப்ரூணியை சார்கோஸி திருமணம் செய்து, இருவருக்கும் பெண் குழந்தை பிறந்தபோது, அவர் மீதான ஆதரவு பழைய நிலைக்குத் திரும்பியது.

ஒரு தலைவரை மக்கள் எந்தளவிற்கு அங்கீகரிக்கிறார்கள் என்பதைத் தீர்மானிப்பதில் அவரது தனிப்பட்ட வாழ்க்கை முக்கியமானதொரு விடயமாக இருக்கிறது. ஒரு தலைவரின் தனிப்பட்ட வாழ்க்கையில் உள்ள பிரச்சினைகள் மீது மக்கள் அக்கறை காட்ட வேண்டுமா? அது அவசியமானது தானா?

தனிப்பட்ட வாழ்க்கை எப்படியாவது இருந்து போகட்டும். அது அவரது ஆட்சி நிர்வாகத்தைப் பாதிக்காவிட்டால் அதைப் பற்றி கவலைப்படுவதில் அர்த்தம் உண்டா?

சமகால உலகில் இவை மிகவும் முக்கியமான கேள்விகள். துரதிருஷ்ட வசமாக இதற்கு ஆமென்றோஇ இல்லையென்றோ தீர்க்கமாக பதில் அளிக்க முடியாது. அமெரிக்காவைப் பொறுத்த வரையில் இராஜ்ஜியத் தலைவரான ஜனாதிபதியின் குடும்ப வாழ்க்கை சீரானதாக இருப்பது மிகவும் முக்கியமானது.

இங்கு ஜனாதிபதியின் மனைவி, அதாவது முதற்பெண்மணி, தனிப்பட்ட மனுஷி அல்ல. அவர் ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பின் ஓரங்கம். ஜனாதிபதியின் குழுவில் முதற்பெண்மணிக்கு முக்கியமான வகிபாகம் உண்டு. வெள்ளை மாளிகையில் முதற்பெண்மணிக்கு தனியானதொரு அலுவலகம் இருக்கிறது.

சம்பிரதாயபூர்வ விழாக்களில் முதற்பெண்மணி கட்டாயமாக பங்கு பற்றியே ஆக வேண்டும். பொதுப் பணிகளில் பங்களிப்பு செய்வது கட்டாயமானது. அங்கு பராக் ஒபாமாவிற்கு எந்தளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதோ, அதேயளவு முக்கியத்துவம் மிஷெல் ஒபாமாவிற்கு இருந்தது.

பில் கிளின்டனின் மனைவியான ஹிலாரி கிளின்டனும் அப்படித்தான். வெள்ளை மாளிகையில் தீர்க்கமானதொரு சக்தியாக அவர் விளங்கினார்.

இது வேறு நாடுகளில் வித்தியாசப்படுகிறது. சில நாடுகளில் முதற்பெண்மணியின் பெயர் என்ன என்று கேட்டால், எவ்வளவு மெனக்கெட்டாலும் நினைவில் கூட வராது. சீனப் பிரதமர் லீ கியாங்கின் மனைவி யார்? ஜேர்மனியின் முன்னாள் சான்ஸ்லர் ஏஞ்சலா மேர்க்கலின் கணவரது பெயரை அறிந்திருக்கிறீர்களா?

இத்தாலியில் முதற்பெண்மணி என்ற சொற்றொடருக்கு சரியான மொழிபெயர்ப்பே கிடையாதாம். அங்கு ஆங்கிலப் பதம் தான் பயன்படுத்தப்படுகிறதாம். அங்கு பிரதமராக இருந்த சில்வியோ பெர்லுஸ்கோனி ஸ்த்ரீலோலனாகவே பார்க்கப்படுவது உண்டு. இவர் சம்பந்தப்பட்ட ஏராளமான சர்ச்சைகள்.

ஒரு கட்டத்தில் பெர்லுஸ்கோனியை அவரது மனைவி விவகாரத்து செய்தார். ஆனாலும் கூட அவருக்கு எதிராக அரசியல் குற்றப்பிரேரணை தாக்கல் செய்யப்படவும் இல்லை. அவர் பதவி விலகவும் இல்லை. இது இத்தாலியின் ஜனநாயக ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பில் அரச தலைவர்களின் ஒழுக்கம் பற்றி அந்நாட்டின் சமூகத்திலுள்ள பொதுப்புத்தி. இந்தப் பொதுப்புத்தியைத் தீர்மானிப்பதில் கலாசார காரணிகளும் தாக்கம் செலுத்த முடியும்.

ஒரு சமூகம் மத விழுமியங்களை மதிப்பதாகவும், அந்த மத விழுமியங்களில் குடும்பம் என்ற அலகிற்கு முக்கியத்துவம் உள்ளதாகவும் வைத்து கொள்வோம். அத்தகைய சமூகத்தில் அரச தலைவர் ஒழுக்கம் மிக்கவராகவும், சிறப்பான குடும்ப உறவைக் கொண்டவராகவும் இருப்பது அவசியமாகும்.

இந்தத் தகுதிகள் இல்லாத பட்சத்தில், இத்தகைய தலைவர் தாம் வகிக்கும் பதவிக்கு பொருத்தமற்றவராகக் கருதப்படுவார். இது அரசியலும், மதமும் ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பிலோ, கலாசார ரீதியாகவோ பின்னிப் பிணைந்த தேசங்களில் காணக்கூடிய இயல்பு.

கனடாவைப் பொறுத்தவரையில், மதம் உள்ளிட்ட காரணிகளை விடவும் ஆட்சி நிர்வாகத் திறன் என்பதே ஜனநாயகத்தைத் தீர்மானிப்பதாக அமைந்திருக்கிறது.

ட்ரூடோ மனைவியிடம் இருந்து பிரிந்ததைப் பற்றியோ, பிரிவிற்கான காரணங்கள் பற்றியோ அந்நாட்டு மக்கள் அதிக கரிசனை காட்டாமல் இருக்கிறார்கள். கனடாவின் அரசியல் வரலாற்றை ஆராய்ந்தால், பதவியில் இருக்கையில் மனைவியைப் பிரிந்த ஒரே ஒரு பிரதமர் தான் இருக்கிறார். அவர் வேறு யாருமல்லர். தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவ்வின் தந்தை. 1977இல் மனைவியை விட்டுப் பிரிந்த பியரே எலியெட் ட்ரூடோ.



இந்தப் பிரிவுக்குப் பின்னரும் பியரே ட்ரூடோ பிரதமராக இருந்தார். இன்னொரு தடவையும் பிரதமராக தெரிவானார். அவர் மனைவியை விவகாரத்து செய்ததால், கனேடிய மக்கள் அவரை நிராகரிக்கவும் இல்லை. மனைவியுடன் வாழத் தெரியாத குடும்பத்தில் இருந்து வந்தார் என ஜஸ்டின் ட்ரூடோவை புறக்கணிக்கவும் இல்லை.

கனேடிய மக்களைப் பொறுத்தவரையில், மதமோ, வேறெந்த காரணங்களோ முக்கியமில்லை. ஜனநாயக ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பில் அவரது நோக்கமும், ஆற்றலுமே முக்கியம்.

எதற்காக ஒருவர் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டு அரசியல் பதவியைப் பெற விரும்புகிறாரோ, அந்தப் பதவிக்குரிய எதிர்பார்ப்புகளை அடியொட்டிச் சென்று அவற்றை சரியாக நிறைவேற்றினால் போதும். மற்றதெல்லாம் பொருட்டல்ல என்பது கனேடிய மக்கள் கற்றுத்தரும் ஜனநாயகப் பாடம், ஜஸ்டின் ட்ரூடோவின் கதை. நன்றி:- வீரகேசரி

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

05 ஆகஸ்ட் 2023 முதல் 11 ஆகஸ்ட் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

## மேலதிக விபரங்களுக்கு:-

## ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# 4வது ஆண்டு நினைவஞ்சலி



## திரு தம்பிராசா காசிலிங்கம்

யாழ்.ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராசா காசிலிங்கம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 06 ஆகஸ்ட் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி, அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பிராசா காசிலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# 13வது திருத்தம் அவசியம்! அதனை மாற்ற முடியாது!

(3ம் பக்கத் தொடர்ச்சி). பல நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்காக மாகாண சபை முறையை ஒழிக்க முடியாது மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையே உள்ள அதிகாரம் குறித்து தனித்தனியாக தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே, மாகாண சபைக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையிலான விடயதானங்கள் பொருந்தாமல் இருக்கிறது. பணியாற்றும் போது ஒருவருக்கொருவர் மோதிக் கொள்கிறார்கள். ஒரே பணி இரண்டு இடங்களில் செய்யப்படுகிறது. பணிகள் தாமதமாகிறன. மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு பதிலாக வளர்ந்து வருகின்றன.இவ்வாறான காரணங்களினால், மாகாண சபைகளை வெள்ளை யானைகள் என்று கூறும் நபர்களும் நாட்டில் இருக்கின்றார்கள்.

எவ்வாறாயினும், அந்த அனைத்து குறைபாடுகளுக்கும் பலவீனங்களுக்கும் மத்தியில், மாகாண சபைகளை இலங்கையின் அரசியல் பாதையில் தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்திய கட்டமைப்பு என்று அழைக்கலாம். மாகாண சபைகள் திறமையான அரசியல் தலைவர்களை உருவாக்கும் மேடையாகவும் நிறைவேற்று அதிகாரம் மற்றும் பாராளுமன்றத்திற்கான நுழைவாயிலாகவும் மாறியுள்ளது. கடந்த காலங்களில் மாகாணசபை உறுப்பினர் பதவியில் இருந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்த பலர் நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் ஏனைய பொறுப்பான பதவிகளை வகித்த பல சந்தர்ப்பங்களை நாம் காண முடியும். இன்று இந்த சபையில் அமர்ந்துள்ள அமைச்சர்களில் அநேகர், மாகாண சபை உறுப்பினர் பதவி முதல் முதலமைச்சர் பதவி வரை பல்வேறு பதவிகளை வகித்துள்ளனர்.

மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போது சில அரசியல் கட்சிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தன. சில கட்சிகள் ஜனநாயக முறையிலும், சில கட்சிகள் ஜனநாயகத்திற்கு விரோதமாகவும் எதிர்ப்பு தெரிவித்தன. பல உயிர்கள் பலியாகின. நாட்டின் சொத்துக்களும் தேசிய வளங்களும் எரிக்கப்பட்டன. அது கடந்த காலம். ஆனால் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் எவையும், மாகாண சபைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்று கூறவில்லை. அந்த அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் மாகாண சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர்.

இங்கு இன்னொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். மாகாண சபை அதிகாரப் பகிர்வு, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இந்த நாட்டின் அதியுயர் சட்டமாகும். அதை நாம் புறக்கணிக்க முடியாது. நிறைவேற்று அதிகாரமும், பாராளுமன்றமும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும். 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான எனது முன்மொழிவுகளையும் எதிர்கால திட்டங்களையும் நான் இந்த சபையில் முன்வைக்கிறேன். அந்த பரிந்துரைகளை ஆழமாக ஆராயுங்கள். உங்கள் யோசனைகளை சமர்ப்பிக்கலாம். அந்தக் கருத்துக்கள் அனைத்தையும் ஆராய்ந்து, மாகாண சபைகளின் வகிபாகம் மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்து இறுதித் தீர்மானத்தை எட்ட வேண்டிய பொறுப்பு முழுவதுமாக இந்த கௌரவ சபையையே சாரும்.


13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ், மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதில் பொலிஸ் அதிகாரங்கள் மிகவும் உணர்வுபூர்வமான விடயமாக மாறியுள்ளது. எனவே ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் முதலில் நாம் உடன்பாட்டிற்கு வருவது மிகவும் நடைமுறைச்சாத்தியமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். நாம் கட்டம் கட்டமாக இதனை தொடரலாம். உணர்வுபூ ர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால், எந்த ஒருமித்த கருத்தையும் அடைவது கடினமாக இருக்கலாம். நாம் இறுதியில் இருந்து தொடங்காமல் ஆரம்பத்திலிருந்து தொடங்குவோம். எனவே முதலில் ஏனைய அதிகாரங்களை பரவலாக்குவது பற்றி பேசி, பொதுவான உடன்பாட்டை எட்டுவோம். அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான தென் பகுதி முதலமைச்சர்களின் அறிக்கையையும் நாம் அடிப்படையாக எடுத்துக் கொள்ளலாம்.

அனைத்து விடயங்களையும் பொது உடன்படிக்கையுடன் செய்வோம். நாட்டின் எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்து பொதுவான முடிவுகளை எடுக்கும் பலமும் புத்தியும் இந்த பாராளுமன்றத்திற்கு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவோம். எவ்வித அரசியல் நோக்கங்களும் இன்றி, நாட்டிற்குள் நிலையான நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காக வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். இலங்கையின் அபிவிருத்திக்கு நல்லிணக்கம் அத்தியாவசியமானது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிக்களுடன் அது தொடர்பில் கலந்துரையாடலை நடத்தியிருந்தேன். அந்த சந்திப்பு தொடர்பில் சபையிலிருக்கும் உறுப்பினர்களை தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமையாகும். அது உத்தேச பயணத்திற்கான தடமாகும் என்ற வகையில் அரசாங்கம் அதனூடாக முன்னேறிச் செல்ல எதிர்பார்க்கிறது. அந்த வகையில் தேசிய நல்லிணக்கத்திற்கு அவசியமான விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பான எனது முன்மொழிவுகள் மற்றும் வழிமுறைகளை நான் முன் வைத்துள்ளேன். இதனை ஆழமாக ஆராய்ந்து உங்கள் கருத்தை தெரிவிக்கலாம். இந்த பாராளுமன்றத்திற்கு பலமும் பரந்த அறிவும் உள்ளது என்பதை உறுதிப்படுத்த ஒன்றிணையுமாறு இந்த கௌரவ சபையிடம் கேட்டுக்கொள்கிறேன்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




30 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமை தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ்.நாச்சிமார் கோவிலடியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு அப்புக்குட்டி செல்லத்துரை அவர்களது 31ம்நாள் நினைவுநாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



30 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பிறிக்டிக்கா சுகுமார் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



02 ஆகஸ்ட் 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



06 ஆகஸ்ட் 2023 ஞாயிற்றுக்கிழமை யாழ்.ஊரெழவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா காசிலிங்கம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



06 ஆகஸ்ட் 2023 ஞாயிற்றுக்கிழமை யாழ்.ஊரெழவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா காசிலிங்கம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 ஆகஸ்ட் 2023 புதன்கிழமை நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு யோகேந்திரன் பரராசசிங்கம் அவர்களின் 50வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திரு யோகேந்திரன் பரராசசிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.


கனடா இந்து மாமன்றம்

CANADA HINDU MAAMANTRAM

ஓ

## கனடா இந்து மாமன்றம்

கனடா இந்து மாமன்றம் இதுவரை களிப்புடன் படைத்திருந்த சர்க்கரைப் பொங்கல் ஆண்டு விழா தவிர்க்கமுடியாத காரணங்களால் தாமதமாகி இவ் ஆண்டின் பொங்கல் விழா, "சிவநெறிக் காவலர்" அமரர் நந்தீஸ்வரர் அவர்களின் நினைவாஞ்சலி நிகழ்வுடன், தேனாய் சுவைக்கும் இன்னிசை, மனதைவயப்படவைக்கும் வீணாகானம், மற்றும் கண்களுக்கு விருந்தாகும் நடனம் போன்ற சிறப்பு மிக்க கலை நிகழ்சிகளுடன் விழா இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது.

காலம்: August 12, 2023 சனிக்கிழமை மாலை 6:00 - 9:00 மணி வரை
இடம்: "தமிழ் கலை அரங்கம்", தமிழிசைக் கலா மன்றம்,
1120 Tapscott Road, Scarborough

அனுமதி இலவசம்

## கனடா அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO
SWAMI SARANAM

# ஆடி அமாவாசை விரதமும், பிதிர்தர்பணமும்
# காலம்: 15.08.2023 செவ்வாய்க்கிழமை



மெய்யடியார்களே!

கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் ஆடி அமாவாசை விரதத்தை முன்னிட்டு 15.08.2023 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணி முதல் சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேக பூஜைகள் நடைபெறுவதுடன் உயிர்நீத்த தந்தையருக்கான பிதிர்தர்பணமும் (எள்ளும், தண்ணியும் இறைத்தல்), மோட்ச அர்ச்சனையும், மோட்ச தீபம் ஏற்றுதலும் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

☞ பிதிர்தர்ப்பணம் – காலை 6.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடைபெறும். அர்ச்சனைகள் தொடர்ந்து மாலை 9.15 மணி வரை நடைபெறும்.

☞ விரதச் சாப்பாடு ஆலயத்தில் வழங்கப்படும்.

☞ ஆலயம் காலை 6.00 மணிமுதல் இரவு 9.15 மணி வரைக்கும் முழுமையாகத் திறந்திருக்கும்.

## CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 | Tel: 416-321-6104 | Fax: 416-321-7557 | www.ayyappan.com

## கனடா அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO
SWAMI SARANAM

# வரலக்ஷ்மி விரதமும், திருவிளக்குப் பூஜையும்
# காலம்: 25.08.2023 வெள்ளிக்கிழமை



வரலக்ஷ்மி விரதத்தை முன்னிட்டு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் காலை, மாலை மஹாலக்ஷ்மி ஹோமமும், அபிஷேக பூஜையும் நடைபெற்று திருவிளக்குப் பூஜையுடன் விரதக்காப்பும், பிரசாதமும் வழங்கப்படும்.

வரலக்ஷ்மி விரத நோன்பு இருக்கும் கன்னிப் பெண்கள், சுமங்கலிப் பெண்கள், விரத தாதிகள் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

## திருவிளக்குப் பூஜை நடை பெறும் நேரங்கள்

காலை – 9:30 மணி, 11:00 மணி

மாலை – 4:00 மணி, 5:30 மணி, 6:30 மணி, 7:30 மணி

## CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 | Tel: 416-321-6104 | Fax: 416-321-7557 | www.ayyappan.com

# என் இனமே! என் சனமே! என்னை உனக்கு தெரிகிறதா? தாகமாய் இருக்கின்றோம்! கொஞ்சம் கிள்ளிப் போடுங்கள்!

என் இனிய உறவுகளே! 12 வருடங்களுக்கு முன்னர் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லம் செஞ்சோலை இல்லம் என மூன்று இல்லங்களில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களது உணவுத் தேவை, கல்விக்கான தேவைகளை கனடா வாழ் தமிழ்ச் சமூகம் ஈழநாடு பத்திரிகை வாயிலாக ஆற்றி வருவது யாவரும் அறிந்ததே.

கடந்த 09 யூலை 2023 நாம் இந்த இல்லங்களுக்குச் சென்ற போது இன்னும் இன்னும் குழந்தைகளும் பிள்ளைகளும் இணைந்த வண்ணமேயுள்ளனர். இட நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, நிதி நெருக்கடி போன்ற பல்வேறு நெருக்கடிகளை நாம் எதிர் கொண்ட போதும் எமது மண்ணின் வருங்காலச் சந்ததி, எதிர்காலத்தில் அந்த மண்ணில் வாழப் போகும் சந்ததி. இவர்களைக் கை விடலாமா என்ற எண்ணமே மேலோங்கி நிற்கின்றது. மனிதாபிமானமும் மனித நேயமும் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ள காரணத்தால் சுமார் 15 குழந்தைகளை புதிதாக உள்வாங்கியுள்ளோம்.

உறவுகளே! இந்தக் குழந்தைகளை உற்று நோக்குங்கள். இவர்கள் செய்த பாவம் என்ன? தமிழராய் பிறந்தது குற்றமா? தேச விடுதலைக்குப் பெற்றோர்கள். உறவுகள் போராடியது குற்றமா? குடும்பத்தை வறுமை துரத்தியது எதனால்? சிந்தியுங்கள்.

அன்பு உறவுகளே! எதிர்வரும் 29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை இவர்களது வாழ்வுக்காக நடைபெறவுள்ள நிகழ்வில் கலந்து கொள்ளுங்கள். நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலரும் அவர்களைச் சென்றடையும். கடந்த காலங்கள் போல் கணக்கு விபரங்கள் ஈழநாட்டில் பிரசுரமாகும். உங்கள் ஆதரவை 416 841 9600 என்ற தொலைபேசி ஊடாகத் தெரிவிக்கவும். மேலதிக விபரங்கள் அடுத்தவாரம் வெளிவரும்.

பாரதி இல்லம் அன்பு இல்லக் குழந்தைகளையும் கனடியத் தமிழ் சமூகத்தின் ஆதரவோடு கட்டப்பட்ட இல்லத்தையும் பிள்ளைகளின் பாடசாலைப் போக்குவரத்துக்காக வாங்கிய பஸ் வண்டியையும குழந்தைகள் மனதில் மத பேதம் இருக்கக் கூடாது என்பதற்காக அருகருகே அமைந்த ஆலயத்தையும் காண்கின்றீர்கள். அத்துடன் இல்லக் குழந்தைகளின் தாயாக விளங்கும் தாய்மார்களேயே காண்கின்றீர்கள். நன்றி.

















# கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலய ஜோதிவிழா 2023

# அலை கடலெனத் திரண்ட மக்கள்!














# இந்திய உள்துறை அமைச்சர் இனப்படுகொலை என்று சொன்னாரா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கடந்த மாதம் 27ஆம் திகதி இராமேஸ்வரத்தில் வைத்து ஆற்றிய உரையில் இலங்கையில் இடம்பெற்றது மனிதப் பெரும் படுகொலை என்ற அர்த்தத்தில் ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் அமைப்பாளரான அண்ணாமலை "என் மண் என் மக்கள் என்ற பெயரில் ஒரு பாத யாத்திரையை ஆரம்பித்திருக்கிறார். அதன் தொடக்க நிகழ்வு



இராமேஸ்வரத்தில் இடம் பெற்றது. அதில் அமித்ஷா பேசினார். பேச்சில் ஒரு பகுதி பின்வருமாறு காங்கிரஸ் மற்றும் திமுகவின் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஆட்சி காலத்தில் தான் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை நடந்தது. தமிழக மீனவர்கள் மீனவர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளானார்கள்.

இதில் அமித்ஷா பயன்படுத்திய வார்த்தை நேரடியாக இனப்படுகொலை என்ற அர்த்த்தை தருகிறதா என்று விடயம் தெரிந்தவர்களிடம் கேட்டேன்.

அவர் நரசங்கார என்ற வார்த்தையை பயன் படுத்தியதாகவும். அதன் முதல் நிலை அர்த்தம் பாரிய மனிதப் படுகொலை என்றும் விவரம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். எனினும் அதனை இனப்படுகொலை என்று வியாக்கியானம் செய்ய முடியும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அதேசமயம் அமைச்சரின் உத்தியோகபூர்வ ருவிற்றர் தளத்தில் இனப்படுகொலை என்ற வார்த்தை தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மேற்படி அண்ணாமலையின் பாதயாத்திரை தொடர்பாக ஒரு காணொளி வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் ஓரிடத்தில் ஈழத்தமிழர் கண்ணீர்ச் சாபம் என்றும் வீணாய்ப் போகாது என்ற ஒரு வசனம் உண்டு. அதை தொடர்ந்து நமக்கு தமிழ் ஈழம் வேண்டும் என்ற ஒரு சுலோக அட்டை பாலச்சந்திரனின் முகம் போன்றன காட்டப்படுகின்றன. அக்காணொளியும் காங்கிரஸ்.திமுக கூட்டுக்கு எதிராகத் தான் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது விடயத்தைத் தொகுத்துப் பார்க்கலாம். அண்ணாமலை தென்னகத்தில் பாரதிய ஜனதாவின் நம்பிக்கை நட்சத்திரமாக மேலெழுந்து வருகிறார். ஈழத்தமிழர்களில் ஒரு பகுதியினர் அவரை கொண்டாடுகிறார்கள். தமிழகத்தில் அடுத்த தேர்தலை நோக்கி காங்கிரசுக்கும் திமுகவுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் கூட்டு பலமானது என்று நம்பப்படுகிறது. இக்கூட்டின் வெற்றி வாய்ப்புகளை குறைப்பதற்காக ஈழத்தமிழர்கள் விவகாரத்தையும் பாரதிய ஜனதா கையில் எடுத்திருக்கிறது. ஈழத்தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதற்கு காங்கிரஸும் திமுகவும் காரணம் என்று பாரதிய ஜனதா பிரச்சாரம் செய்கின்றது. பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகவே அமித்ஷா இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

அமித்ஷா ஓர் உள்துறை அமைச்சர். உள்துறை அமைச்சு எனப்படுவது இந்தியாவைப் பொறுத்த வரையிலும் பிரதமருக்கு அடுத்த படியான பதவி. அவ்வாறான பொறுப்பில் இருக்கும் ஒருவர். குறிப்பாக பாரதிய ஜனதாவின் பெருந் தலைவர்களில் ஒருவர். அவ்வாறு இனப்படுகொலை என்று தமிழில் ருவிற் செய்கிறார். அதை எப்படிப் பார்ப்பது?

உள்நாட்டு அரசியல் தேவைகளுக்காக வெளியுறவு சம்பந்தப்பட்ட ஒரு விவகாரத்தை பொறுப்பின்றிக் கையாள முடியாது. இலங்கைத்தீவில் இடம் பெற்றது பெரிய மனிதப் படுகொலை அல்லது இனப்படுகொலை என்று இந்திய உள்துறை அமைச்சர் கூறுகிறார். அது நிச்சயமாக இந்தியாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாகத் தெரியவில்லை. இந்தியா மட்டுமல்ல இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இலங்கைக்கு அச்சுறுத்தலான தீர்மானங்களை நிறைவேற்றிய கனடா கூட இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதனை அதன் உத்தியோகபூர்வ அரச நிலைப்பாடாக இதுவரை அறிவித்தி



ருக்கவில்லை. உலகில் எந்த ஒரு நாடும் அறிவித்திருக்கவில்லை. இதில் மேற்கத்திய நாடுகளோடு ஒப்பிடுகையில் இந்தியா ஈழத் தமிழர்கள் பெருமெடுப்பில் படுகொலை செய்யப்பட்டார்கள் என்ற விடயத்தை வெளிப்படையாக உத்தியோபூர்வமாக கூறுவதற்கு அநேகமாக தவிர்த்து வந்தது. அமித்ஷா இப்பொழுது அதை நரசங்கார்– Narasanhaar என்று கூறுகிறார்.

1983ஆம் ஆண்டு ஒகஸ்ட் 16ஆம் திகதி திருமதி இந்திரா காந்தி நாடாளுமன்றத்தில் இலங்கையில் நடப்பது இனப்படுகொலை என்று கூறினார். 1983 ஜீலைப் படுகொலைகளை எதிர்த்து ஒகஸ்ட் மாதம் 16ஆம் திகதி தமிழகம் முழுவதும் வரலாறு காணாத பூரண கர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் இந்திராகாந்தி நாடாளுமன்றத்தில் பின் வருமாறு உரையாற்றினார்...இலங்கைத்தீவில் நடப்பது என்ன? அது இனப்படுகொலை தவிர வேறு எதுவுமில்லை.

ஒரு இந்திய தலைவர் அவ்வாறு குறிப்பிட்டமை அதுதான் முதல் தடவை. அதற்குப் பின் எந்த ஒரு இந்தியத் தலைவரும் அவ்வாறு கூறியிருக்கவில்லை. இந்திராகாந்தி அவ்வாறு கூறிச் சரியாக 40 ஆண்டுகளின் பின் இந்திய உள்துறை அமைச்சர் இப்பொழுது அதை இனப்படுகொலை என்ற பொருள்பட வர்ணித்துள்ளார்.

ஆனால் அதை அவர் ஒர் அரசியல் நிலைப்பாடாகக் கூறவில்லை என்று ஓர் இந்திய ஊடகவியலாளர் சுட்டிக் காட்டினார். தமிழகத்தில் திமுக. காங்கிரஸ் கூட்டைத் தோற்கடிப்பதற்கான வியூகத்தின் ஒரு பகுதியே அது வென்று அவர் வர்ணித்தார். தமிழக அரசியலில் ஈழத்தமிழர் விவகாரம் எனப்படுவது ஈழத்தமிழ் நோக்கு நிலையில் இருந்து கையாளப்படுவதை விடவும் தமிழகத்தின் தேர்தல் அரசியல் நோக்கு நிலையில் இருந்து தான் கையாளப்பட்டு வருகிறது என்பது ஈழத் தமிழர்களின் துயரங்களில் ஒன்று.

அண்ணாமலையின் வருகைக்குப்பின் பாரதிய ஜனதா தமிழகத்தில் எழுச்சியைக் காட்டுகின்றது. அதேசமயம் காங்கிரசுக்கும் திமுகவுக்கும் இடையிலான கூட்டு பலமானது வெற்றி வாய்ப்புகளைக் கொண்டது என்றும் நம்பப்படுகிறது.அதனால் தான் அந்தப் பலத்தை உடைக்கும் நோக்கத்தோடு ஈழத்தமிழர்களின் விடயத்தில் தவறிழைத்தது இந்த இரண்டு கட்சிகளின் கூட்டுத் தான் என்று அமித்ஷா கூறுகிறார்.

குறிப்பாக அமித்ஷா அவ்வாறு கூறிய இடம் கூறிய காலம் எது என்பதை இந்திய –இலங்கை உறவுகளின் பின்னணியில் வைத்தும் பார்க்க வேண்டும். அண்மையில் ரணில் விக்கிரமசிங்க டெல்லிக்கு சென்றிருந்தார். அங்கே அவர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு தரை வழிப் பாலத்தை கட்டுவது தொடர்பான முன்மொழிவை கொடுத்திருந்தார். அந்த முன்மொழிவை அவர் ஏற்கனவே 2004ஆம் ஆண்டும் முன் வைத்திருந்தார். அப்பொழுது அவர் பலவீனமான பிரதமர். அப்பொழுது திருமதி சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்தார். அந்த ஆட்சியை விமர்சகர்கள் இரட்டை ஆட்சி என்று வர்ணித்தார்கள். சந்திரிகா ஒரு பக்கம் இழுக்க ரணில் இன்னொரு பக்கம் இழுத்தார். அதன்பின் 2015ல் ரணில் ஆட்சிக்கு வந்ததும் இந்திய வீதிய போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி பாலம் கட்டும் யோசனையைப் புதுப்பித்தார். அப்பொழுதும் ரணில் பலமான தலைவர் அல்ல.அவர் பலவீனமான ஒரு பிரதமராக இருந்தார். ஜனாதிபதியாக மைத்திரி இருந்தார். அங்கேயும் இருவருக்கும் இடையே இழுபறி இருந்தது. அதனால் நிதின் கட்கரியின் யோசனையின் தொடர்ச்சியாக உரையாட ரணில் தயாராக இருக்கவில்லை. ஆனால் ரணில் அந்த யோசனையை முன் வைத்து 11 ஆண்டுகளின் பின் நிதின் கட்கரி அந்த யோசனையை மீண்டும் புதுப்பித்தமை என்பதில் இந்தியாவின் வெளியுறவு இலக்குகள் இருந்தன. ரணில் பலவீனமானவரோ இல்லையோ அவர் ஒரு தலைவர். அவர் முன் வைக்கும் யோசனையை இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்வதன் மூலம் இந்தியா அந்த விடயத்தை சீரியஸாகக் கையாள முற்பட்டது. ஆனால் அப்பொழுது ரணில் பலவீனமான ஒரு பிரதமராக இருந்தார்.

இப்பொழுது மீண்டும் 19 ஆண்டுகளின் பின் அதே யோசனையை ரணில் முன் வைத்திருக்கிறார். ஆனால் இப்பொழுதும் அவர் பலவீனமான. அதாவது மக்கள் ஆணை இல்லாத ஒரு ஜனாதிபதி தான். தாமரை மொட்டுக்களின் தயவில் தங்கியிருப்பவர். அதாவது அப்பாலத்தை கட்டும் முன்மொழிவுகளை ரணில் முன் வைக்கும் போதெல்லாம் அவர் பலவீனமான ஒரு தலைவராகவே இருக்கிறார். ஆனால் அவர் பலவீனமானவரா பலமானவரா என்பதல்ல இங்கு பிரச்சனை. அவர் ஓர் அரசுத் தலைவர். மற்றொரு அரசுத் தலைவருக்கு அவர் வழங்கிய வாக்குறுதி அது. எனவே இந்தியா அந்த வாக்குறுதியை எப்படி நடைமுறைப்படுத்துவது என்று தான் சிந்திக்கும்.

அப்படி ஒரு பாலத்தை ரணில் மட்டுமல்ல எந்த ஒரு சிங்களத் தலைவருமே கட்டத் துணிய மாட்டார்கள் என்பது இந்தியாவுக்குத் தெரியும். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சுமுகமான உறவு உள்ளவரை. அப்படி ஒரு பாலம் கட்டப்படுவதற்கு எந்த ஒரு இலங்கை தலைவரும் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. அப்படி ஒரு பாலம் கட்டப்பட்டால் இலங்கை இந்தியாவின் மாநிலம் ஆகிவிடும் என்று தான் சிங்கள மக்கள் சிந்திப்பார்கள். எனவே அது விடயத்தில் எந்த ஒரு சிங்களத் தலைவரும் ரிஸ்க் எடுக்கத் துணிய மாட்டார்.

எனினும். ரணில் திரும்பத் திரும்ப அது தொடர்பான வாக்குறுதிகளை இந்தியாவுக்கு வழங்குகிறார். ஏன்? ஏனென்றால் இந்தியாவை வசப்படுத்த அது உதவும் என்று அவர் நம்புகின்றார். அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் இந்தியாவைத் தன் பக்கம் வைத்துக் கொள்ள அது உதவும் என்றும் நம்புகிறார். சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறிய இச்சிறிய தீவை இந்தியாவுடன் இணைக்கத் தயார் என்று கூறுவதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பான அச்சங்களைப் போக்கலாம் என்றும் அவர் நம்புகின்றார்.

இதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்லலாம். நாய்கள் சண்டை போடும் பொழுது தோற்றுப்போன நாய் என்ன செய்யும் தெரியுமா? (18ம் பக்கம்)

# இனப்பிரச்சனை தொடர்பில் சகல கட்சிகளுடனும் பேசுவது வரவேற்கத்தக்கது! அணுகுமுறை நேர்மையாக இருக்க வேண்டும் - அவுஸ்திரேலிய தூதுவர்

சகல அரசியல் கட்சிகளுடனும் ஜனாதிபதி பேச்சு நடத்துவது ஒரு நல்ல விடயமென்று நினைக்கிறேன். ஆனால் அது நேர்மையானதாக இருக்க வேண்டும். நிறைய சமூகங்கள் அங்கே காயப்பட்டிருக்கின்றன. எனவே அரசாங்கம் அதை உணர்ந்து செயல்பட வேண்டும். ஆலோசனை மற்றும் சகலதையும் உள்ளடக்கிய வகையில் செயல்பட வேண்டும். தற்போதைய அரசாங்கம் அதைச் செய்யத் தயாராக இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது என்று இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஸ்டீபன் போல் தெரிவித்தார். அவர் வழங்கிய விசேட செவ்வியிலேயே இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

**கேள்வி:-** இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையின் தற் போதைய நிலைமை குறித்து உங்கள் மதிப்பீடு என்ன?

**பதில்:-**செல்லுபடியான, விரிவான பொறுப்புக்கூறல், நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்க அணுகுமுறையை தீவிரமாக மேற்கொள்ள பல ஆண்டுகளாக இலங்கையை நாங்கள் ஊக்குவிக்கிறோம். ஆனால், நல்லிணக்கம் என்பது இயல்பாகவே கடினமான செயல் என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். அதை மேற்கொண்ட நாடுகள் உள்ளன. 30 ஆண்டு காலப் போர் ஒரு கடினமான பாரம் பரியத்தை விட்டுச் சென்றுள்ளது.

அந்த மரபினூடாக இலங்கை இன்னமும் செயற்பட்டு வருகின்றது. மற்ற நாடுகளின் அனுபவங்களும் படிப்பினைகளும் உள்ளன. தென்னாபிரிக்கா தனது சொந்த அனுபவத்தை முன்மாதிரியாக அல்லது வழிகாட்டியாக இலங்கைக்கு வழங்கியுள்ளது. ஆனால் ஒவ்வொரு நாடும் வித்தியாசமானது. தென்னாபிரிக்காவில் முன்னெடுத்தது இங்கு சாத்தியமற்றுப் போகலாம். எனவே அது இலங்கைக்குச் சொந்தமான செயலாக இருக்க வேண்டும். இலங்கையில் உள்ள பல்வேறு பங்குதாரர்கள் அதில் இடம் பெற வேண்டும். இது இலங்கையின் உந்துதல் செயல்முறையாக இருக்க வேண்டும். அதை வெளியில் இருந்து திணிக்க முடியாது. தென்னாப்பிரிக்கா போன்ற பிற உதாரணங்களிலிருந்து மற்றவர்களிடமிருந்து சில பாடங்களை எடுக்கலாம். ஆனால் அது இலங்கைக்குள் பிறந்து இலங்கையர்களுக்குச் சொந்தமான ஒன்றாக இருக்க வேண்டும்.

**கேள்வி:-** இந்த செயற்பாட்டுக்கு அவுஸ்திரேலியா உதவுமா?

**பதில்:-** இந்த கட்டத்தில் அது எவ்வாறான வடிவமாக இருக்கும் என்று எமக்குத் தெரியாது. ஆஸ்திரேலியாவின் சாத்தியமான உதவியானது, எதிர் காலத்தில் நீங்கள் எப்படி நிலை நிறுத்துகிறீர்கள் என்பதைப் பற்றியதாக இருக்கும்.

**கேள்வி:-** ஆனால் ஜெனிவா தீர்மானங்களை ஆதரித்தீர்கள்?

**பதில்:-** ஜெனீவா மூலமாகவோ ஜெனீவா தீர்மானங்கள் மூலமாகவோ அல்லது எங்களுடைய சொந்த இருதரப்பு ஈடுபாட்டின் மூலமாகவோ அந்த செயல்முறைகளை மேற் கொள்வதற்கு நாங்கள் எப்போதும் இலங்கையை ஊக்குவித்துள்ளோம்.

**கேள்வி:-** வெளிநாடுகளில் வாழும் புலம் பெயர் மக்கள் இலங்கையில் முதலீடு செய்யவேண்டுமென ஜனாதிபதி அழைப்பு விடுக்கிறார். அவுஸ்திரேலிய புலம்பெயர் தமிழ் மக்களுக்கான உங்கள் செய்தி என்ன?

**பதில்:-**அவுஸ்திரேலியாவில் உள்ள புலம் பெயர் இலங்கையர்கள் தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் மற்றும் பர்கர்களை உள்ளடக்கியவர்கள். இலங்கை புலம் பெயர்ந்தோர் ஆஸ்திரேலிய சமூகத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்கள் தமது படிப்பினைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார்களா இல்லையா என்பதை புலம்பெயர் இலங்கையர்களே தீர்மானிக்க வேண்டும். அவர்களில் பலர் வெளிப்படையாக இலங்கையுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுகிறார்கள். அவர்களில் பலர் இலங்கை சமூகம் முன்னோ



க்கி செல்வதற்கு ஆதரவளிப்பதாக நான் நம்புகிறேன்.

**கேள்வி:-**இலங்கையில் அரசியல் அதிகாரப் பகிர்வு தீர்வை தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றனர். இதில் உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:-**நாங்கள் இலங்கையின் நண்பன் என்ற வகையில், இலங்கை ஒரு வலுவான, நிலையான, ஒன்றிணைந்த, உள்ளடக்கிய சமூகமாக முன்னோக்கிச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறோம். எந்தவொரு தீர்வாக இருந்தாலும் அது உள்வீட்டு தயாரிப்பாக இருக்க வேண்டும். அது இலங்கையர்களுக்குச் சொந்தமானதாக இருப்பது அவசியம். அது வெளியில் இருந்து திணிக்கப்பட்டால் நிறைவேறாது.

**கேள்வி:-**ஜனாதிபதி தற்போது தீர்வு விடயம் குறித்து சகல கட்சிகளுடனும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளார். அது பற்றி?

**பதில்:-**சகல அரசியல் கட்சிகளுடனும் ஜனாதிபதி பேச்சு நடத்துவது ஒரு நல்ல விடயமென்று நினைக்கிறேன். ஆனால் அது நேர்மையானதாக இருக்க வேண்டும். நிறைய சமூகங்கள் அங்கே காயப்பட்டிருக்கின்றன. எனவே அரசாங்கம் அதை உணர்ந்து செயல்பட வேண்டும். ஆலோசனை மற்றும் சகலதையும் உள்ளடக்கிய வகையில் செயல்பட வேண்டும். தற்போதைய அரசாங்கம் அதைச் செய்யத் தயாராக இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

**கேள்வி:-** நீங்கள் அடிக்கடி தமிழ் தலைவர்களை சந்திக்கின்றீர்கள். அவர்கள் என்ன கூறுகின்றனர்? அவர்களின் கரிசனை என்னவாக இருக்கின்றது?

**பதில்:-**நீங்கள் அதைக் என்னிடம் கேட்பதை விட அவர்களிடம் கேட்பது நல்லது. உண்மையைச் சொல்வதென்றால், பல கட்சிகள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதில் வேறுபட்ட பார்வையை கொண்டுள்ளன. அது பணிகளை மேலும் கடினமாக்குகிறது என்று நினைக்கிறேன். இது செயல்முறையை கடினமாக்குகிறது என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் வெவ்வேறு கட்சிகளுக்கும் வெவ்வேறு சமூக உறுப்பினர்களுக்கும் வெவ்வேறு குறிக்கோள்கள் மற்றும் இலட்சியங்கள் உள்ளன. அவை செயற்பாடுகளை மேலும் கடினமாக்குகின்றன.

**கேள்வி:-**வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவுஸ்ரேலியா என்ன செய்கிறது?

**பதில்:-**ஆம். சில திட்டங்களை நாங்கள் செய்கிறோம். எங்களிடம் இருதரப்பு மேம்பாட்டுத் திட்டம் உள்ளது. சுகாதாரப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கவனம் செலுத்துகிறோம். மேலும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஆதரவு, வாழ்வாதாரங்கள் என்பனவற்றை செய்கிறோம். மேலும் போரால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அல்லது காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு அவர்களின் சட்டபூர்வ பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் ஆதரவளித்துள்ளோம். வட, கிழக்கில் அந்தச் சமூகங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் திட்டங்களை நாங்கள் கொண்டுள்ளோம். ஆனால் ஒரு நாட்டில் குறிப்பிட்ட மாகாணத்திலோ அல்லது நாட்டின் எந்தவொரு குறிப்பிட்ட பகுதியிலோ கவனம் செலுத்தாமல் ஒட்டுமொத்த ரீதியில் எமது திட்டங்கள் இருப்பதை உறுதி செய்வதில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்கிறோம்.

**கேள்வி:-** காணாமல் போனோரின் உறவினர்களை சந்தித்துள்ளீர்கள். அவர்கள் என்ன கூறுகின்றனர்?

**பதில்:-**காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினர்கள் சிலரை நான் சந்தித்தேன். அவர்களின் கதைகளைக் கேட்பது மிகவும் கடினம். அவர்கள் 14 ஆண்டுகளுக்கு முந்தைய அனுபவத்தை மிகவும் கடினமாக இன்னும் உணர்கிறார்கள். எனவே அவர்கள் சொல்வதைக் கேட்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. அவர்கள் தங்கள் கதைகளைச் சொல்லும் வாய்ப்பைப் விரும்புகிறார்கள். நாம் அந்த கதைகளை மறக்க மாட்டோம்.

**கேள்வி:-** மாகாண சபை தேர்தல்கள் தொடர்பில் தற்போது பேசப்படுகின்றது. அது குறித்து?

**பதில்:-**அரசியலமைப்புக்கு அமைவாக இலங்கை தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அரசியலமைப்பின் கீழ் அந்த பொறுப்புகளை நிலை நிறுத்த அரசாங்கத்தை நாங்கள் ஊக்குவிக்கிறோம். நாங்கள் வெளிப்படையாக ஜனநாயகத்தை ஆதரிக்கிறோம். ஜனநாயக மரபுகளை ஆதரிக்கிறோம். வாக்குப் பெட்டியில் மக்கள் தங்கள் கருத்தைக் கூறுவதற்கான உரிமையை நாங்கள் ஆதரிக்கிறோம். மேலும், அரசியலமைப்பில் தேர்தல்களுக்கு ஒரு காலக்கெடு உள்ளது. அது பின்பற்றப்பட வேண்டும்.

**கேள்வி:-**இறுதியாக இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்க என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:-**இலங்கையில் தமிழ் மக்களின் நிலைப்பாடு அவுஸ்திரேலியாவில் நன்கு புரிந்து கொள்ளப்பட்டுள்ளது என்றே கூறுவேன். இலங்கை ஒரு வலுவான, பாதுகாப்பான, வளமான மற்றும் வெற்றிகரமான சமூகமாக உருவாக வேண்டும் என்பதனை ஆஸி விரும்புகிறது. மக்கள் வடக்கில், கிழக்கில், தெற்கில், மத்தியில் என , எங்கிருந்தாலும் சரி, சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் தேவைகளையும் கவனித்துக் கொள்வதையே அது குறிக்கிறது. தமிழ் சமூகம் உட்பட இலங்கையில் உள்ள அனைவருக்கும் அவுஸ்திரேலியாவில் நிறைய ஆதரவு இருக்கின்றது.

நன்றி:- வீரகேசரி




# சமஷ்டி - தனிநாடு பின்னர் மீண்டும் சமஷ்டி தற்போது 13வது திருத்தமானது காப்பாற்றப்படுமா?

கட்டுரையாளர்:- தாயகத்தில் இருந்து - யசீந்திரா -



இன்று 13வது திருத்தச்சட்டத்திலும் வெட்டிக் குறைப்புக்கள் செய்வது தொடர்பில் உரையாடப்படுகின்றது. 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் தமிழர் தரப்புக்களின் நிலைப்பாடுகள் என்னவாகவும் இருக்கலாம் ஆனால் 13வது திருத்தச்சட்டத்தையாவது பாதுகாக்க முடியுமா அல்லது அதனையும் வெட்டிக் குறைப்பதை அமைதியாக பார்த்துக் கொண்டிருப்பதா என்னும் நிலையிலேயே தமிழ் தேசிய அரசியல், அதன் இயலாமைய பறை சாற்றிக் கொண்டிருக்கின்றது.

விடுலைப் புலிகளுக்கு பின்னரான கடந்த, ஒரு தசாப்தத்திற்கும் மேலான அரசியல் நகர்வானது, நமது தமிழ் தேசிய தரப்புக்களின் இயலாமைக்கான சான்றாகும். இதில் கொள்கைரீதியான உத்தமர்கள் தொடர்பில் விவாதிக்க ஒன்றுமில்லை. அனைவருமே தோல்வியின் அடையாளங்கள் தான்.

சிங்கள ஆளும் வர்க்கம் தமிழ் மக்களுடன் அதிகாரங்களை பகிர்வதற்கு தயாராற்ற சூழலில் தான், தமிழர்களுக்கான அரசியல் இயக்கம் உருவானது. 1949இல் இலங்கை தமிழரசு கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம், நான் உங்களுக்கு ஒரு அடையாளத்தை உருவாக்கித் தருவேன் என்றார். தமிழரசு கட்சியை ஆங்கிலத்தில்



சமஸ்டிக் கட்சியென்று அழைத்தார். இதன் மூலம், தமிழ் மக்களுக்கான தனித்துவமான அடையாளமென்பது, சமஸ்டியடிப்படையிலான இணைப்பாட்சி ஒன்றின் மூலம்தான் சாத்தியப்படுமென்பதே செல்நாயகத்தின் நிலைப்பாடாக இருந்தது.

அவ்வாறானதொரு நிலைப்பாட்டிலிருந்து, ஜி.ஜி.பொன்னம்பலம் விலகிச் சென்றதன் காரணமாகவே, செல்வநாயகம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறி, தமிழரசு கட்சியை உருவாக்கினார். இந்தப் பின்புலத்தில் நோக்கினால், பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் எப்போதோ, சமஸ்டிக் கோரிக்கையை தூக்கியெறிந்து விட்டது. இதனை புரிந்து கொண்டிருப்பதால் தான், ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பேரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்னும் பெயரை பயன்படுத்தாமல், தமிழ் தேசிய மக்கள் முன்னணியென்னும் பெயரில் மக்களிடம் செல்கின்றார்.

செல்வநாயகம் இவ்வாறு சமஸ்டி பற்றி பேசினாலும் கூட சமஸ்டியை அடைவதற்கான போராட்டங்களில் ஈடுபடவில்லை. சமஸ்டியடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை நோக்கி நகர முடியுமென்று அவர் நம்பியிருக்கலாம் ஆனால் அதனை ஒரு பாய்ச்சலில் அடைந்து விட முடியுமென்று அவர் ஒருபோதும் நம்பியதாக தெரியவில்லை. 1957இல் இடம்பெற்ற பண்டா — செல்வா உடன்பாடு பின்னர், 1965இல், இடம்பெற்ற டட்லி-செல்வா உடன்பாடுகளின் மூலம் இது தெளிவாகத் தெரிகின்றது. ஏனெனில் இந்த உடன்பாடுகளில் சமஸ்டி பற்றி பிரஸ்தாபிக்கப்படவில்லை. மிகவும் குறைவான அதிகாரங்கள் தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டிருந்தது. சமஸ்டியை கட்சியின் பெயரில் வைத்திருந்த செல்வநாயகம் சமஸ்டிக்கான இணக்கப்பாடு தொடர்பில் தானே



பேசியிருக்க வேண்டும். அதற்காகத் தானே அவர் சிங்களத் தலைவர்களுடன் உடன்பாடுகளை எட்ட முயற்சித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லையே! ஏன்?

செல்வநாயகம் தொடர்பான சுயசரிதையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதவாது, செல்வநாயகம் எவ்வாறான தலைவரென்றால், அவர் கேக் கிடைக்கவில்லை என்பதற்கான பானை நிராகரிக்கின்ற தலைவர் அல்ல. இந்த பின்புலத்தில் செல்வநாயகம் சமஸ்டியை இலக்காகக் கொண்டிருந்தாலும், சமஸ்டிக்கான உடனடி வாய்ப்புக்கள் தொடர்பில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்னும் முடிவுக்கே நாம் வரவேண்டியிருக்கின்றது.

செல்வநாயகத்தின் குறைந்த தீர்வை எட்டும் முயற்சிகளும் கைகூடவில்லை. சமஸ்டிக்கான பிரத்தியேக போராட்டங்கள் எதனையும் முன்னெடுக்காத செல்வநாயகம் அணியினர் தான், பின்னர், தனிநாட்டுக்கான கோரிக்கையை நோக்கி சிந்தித்தனர். தனிநாட்டுக்கான கோரிக்கையை நவரெட்ணம் முன்வைத்த போது, அதனை நிராகரித்த செல்வநாயகம், பின்னர், தனிநாட்டுக் கோரிக்கை தான் ஒரேயொரு வழியென்னும் முடிவுக்கு வருகின்றார். ஆனால் இப்போதும் தனிநாட்டை எவ்வாறு அடைவதென்னும் கேள்விக்கு செல்வநாயகத்திடம் பதிலில்லை. இது தொடர்பில் ஒரு முறை இரா.சம்பந்தனுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, அவர் கூறினார், இந்தியாவிற்கு தேவைப்பட்டிருந்தால் அது வந்திருக்கும். ஆனால் இந்தியாவிற்கு அவ்வாறானதொரு தனிநாடு தேவைப்பட்டிருக்கவில்லை என்பதை புரிந்து கொள்வதற்கு காலம் எடுத்தது. அதனை ஆய்வு செய்து புரிந்து கொள்ளக் கூடிய வல்லமையுடன் செல்வநாயகமும் இருக்கவில்லை. அன்றிருந்த அனைவரும் சட்டத்துறை சார்ந்தவர்களாக இருந்ததால், பிராந்திய, சர்வதேச அரசியல் சூழலை புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றலுடன் அவர்கள் இருக்கவில்லை.

சமஸ்டியைப் போலவே, செல்வநாயகத்தின் தனிநாட்டுக் கோரிக்கையும் பிசுபிசுத்துப் போனது. வழிமுறை தெரியாது முன்வைக்கப்படும் நிலைப்பாடுகள் அனைத்துமே வெறும் ஏட்டுச் சுரக்காய் தான். அது கறிக்கு உதவாது. ஆனால் தனிநாட்டுக் கோரிக்கையை ஆயுத பலம் கொண்டு அடைய முடியுமென்னும் புதிய சிந்தனையொன்று துளிர்விட்டு, வேகமாக வளர்சியுற்றது. மிதவாதிகளின் இயலாமையே இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு காரணம். இந்த பின்புலத்தில்தான், தமிழர்களின் அரசியல் சர்வதேச கவனத்தை பெறுகின்றது. தமிழர்களை பொறுத்தவரையில், சர்வதேசமென்பது, முதலில் இந்தியா தான்.

இந்தியா இல்லாத சர்வதேசம் என்பது எப்போதுமே சாத்தியமற்ற ஒன்று. அன்றைய உலக அரசியல் சூழலும், அந்தச் சூழலில், அப்போதைய ஆட்சியாளர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன முன்னெடுத்த வெளிவிவகாரக் கொள்கையின் காரணமாகவே, இந்தியா கடுமையாக நடந்து கொண்டது. ஒரு வேளை, ஜே.ஆர். ஜெயவர்த்தன இந்தியாவை சார்ந்திருக்கும் அல்லது அனிசாரா அணுகுமுறைக்கு மாறான கொள்கைரீயான முடிவுகளை எடுக்காதிருந்திருந்தால், இந்தியா இராணுவ ரீதியான தலையீட்டை மேற்கொண்டிருக்காது. ராஜதந்திர அணுகுமுறையிலேயே விடயங்கள் இடம்பெற்றிருக்கும்.ஆனால் நிலைமைகள் இந்தியாவின் கையை மீறிச் சென்றதன் காரணமாகவே, இந்தியா சில கடுமையான நிலைப்பாடுகளை முன்னெடுக்க வேண்டியேற்பட்டது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் இடம்பெற்று 36 வருடங்களாகின்றன. மீண்டும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் அன்று நிராகரிக்கப்பட்டதாக கூறப்பட்ட 13வது திருத்தத்தையாவது பாதுகாக்க முடியுமா, என்னும் கேள்வியுடன், தமிழ் தேசிய அரசியலின் புதிய அத்தியாயம் எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தமிழரின் யுத்தம் தனிநாட்டுக்கானது.



விடுதலைப் புலிகளின் தோல்வி மீளவும் தமிழரின் அரசியல் தலைவிதியை மிதவாதிகளின் கைகளுக்கு மாற்றியது. மிதவாதிகளின் தோல்வியை தொடர்ந்து தான் இயக்கங்களின் எழுச்சி ஏற்பட்டது. 90களின் பின்னர் விடுதலைப் புலிகளின் எழுச்சியானது. தனிநாட்டுக்கான பயணத்தின் தோல்வி மீளவும் சமஸ்டியை உயர்த்திப் பிடிக்கும் நிலைமைய ஏற்படுத்தியது. இங்கு பலரும் கவனிக்க மறுக்கின்ற ஒரு விடயம் உண்டு. அதாவது, சமஸ்டியை அடையும் முயற்சியில் ஏற்கனவே மிதவாதிகள் தோல்வியடைந்திருந்தனர். கடந்த 74 வருடகால தமிழ் தேசிய அரசியலில், சமஸ்டிக்கான பேரம் பேசலை செய்வதற்கான ஆற்றல் பிரபாகரனிடம் மட்டுமே இருந்தது ஆனால், அவர் அதனை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கவில்லை. (20ம் பக்கம் பார்க்க)

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை

ஜாதகம் பார்க்கப்படும்

கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, இலண்டன் வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில்.

பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.

சொன்னால் நடக்கும் வாக்கு சித்தி!

குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும் திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்.

கோ. காசிலிங்கம்

Phone: 437-925 5643 - Whatsapp: 437- 329 4164 - India: 0091 6384381120



# இலங்கையிலா சீனாவின் அடுத்த தளம்?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இன்னும் இரண்டு மாதங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கு, தனது முதலாவது பயணத்தை மேற் கொள்ளவுள்ள நிலையில், சென்ற மாத இறுதியில் அமெரிக்க பல்கலைக்கழக ஆய்வாளர்களின் அறிக்கை ஒன்று வெளியாகியிருக்கிறது. சீனாவின் அடுத்த கடல் கடந்த இராணுவத் தளம் அமையவுள்ள இடம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அது.

'உலகளாவிய அபிலாஷைகளைப் பாதுகாத்தல்: சீனாவின் துறைமுகத் தடம் மற்றும் எதிர்கால வெளிநாட்டு கடற்படைத் தளங்களுக்கான தாக்கங்கள்' என்ற தலைப்பில் இந்த ஆய்வு அறிக்கை வெளியாகியிருக்கிறது.

அமெரிக்காவின் வேர்ஜீனியா மாநிலத்தில் உள்ள வில்லியம் அன் மேரி கல்லூரியின் எய்ட் டேட்டா ஆய்வகத்தின் ஆய்வாளர்களால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கையில் சீனாவின் அடுத்த இராணுவத் தளம் அமையக் கூடும் என எதிர்பார்க்கப்படும் 8 இடங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அதில் முதலாவது இடத்தில் ஹம்பாந்தோட்டை துறைமுகம் இடம்பெற்றிருக்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனா தனது கடற்படைத் தளத்தை அமைக்கவுள்ளது என்ற ஊகங்களும், ஆய்வுகளும் பல ஆண்டுகளாகவே வந்து கொண்டிருக்கின்றன. சீனாவும் இலங்கையும் அதனை எப்போதும் நிராகரித்தே வந்திருக்கின்றன.

கடந்த ஜீன் மாதம் பிரான்ஸ் 24' இணையத்துக்கு வழங்கிய செவ்வியில் கூட, சீனாவுடன் 1500 ஆண்டுகால தொடர்புகள் இருந்தாலும், அதனுடன் எந்த இராணுவ உடன்பாடும் கிடையாது என்றும், அம்பாந்தோட்டை துறைமுகம் வர்த்தக செயற்பாடுகளுக்காகவே சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்தாலும், அதன் பாதுகாப்பு இலங்கை படைகளிடம் தான் உள்ளது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, திட்டவட்டமாக கூறியிருந்தார்.

அது போன்றே அம்பாந்தோட்டையில் சீனா கடற்படைத் தளத்தை அமைக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகும் போதெல்லாம், அது அமெரிக்காவின் கட்டுக்கதை என்றும், அதன் அச்சத்தின் வெளிப்பாடு என்றும் சீனா கூறி வந்திருக்கிறது. எவ்வாறாயினும், இலங்கை உள்ளிட்ட 14 நாடுகளில் சீனா தளம் அமைக்க வாய்ப்புள்ளதாக, சீன ஊடகம் ஒன்று 2014ஆம் ஆண்டிலேயே தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போது, அமெரிக்க பல்கலைக்கழகத்தின் ஆய்வில், சீனா தனது அடுத்த தளத்தை அமைப்பதற்கு சாத்தியமுள்ள 8 நாடுகளின் துறைமுகங்கள் வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் அம்பாந்தோட்டை, ஈக்வடோரியல் கினியாவின் பாட்டா, பாகிஸ்தானின் குவடார், கெமரூனின் கிரிபி, கம்போடியாவின் றீம், வனுவாட்டுவின் போர்ட் லுகன்வில், மொசாம்பிக்கின் நகாலா, மொரிட்டானியாவின் நுவாக்கோட் ஆகியனவே சீனா தளம் அமைக்க வாய்ப்புள்ள இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கெனவே சீனா, ஜிபுட்டியில் தனது முதலாவது கடற்படைத்தளத்தை 2016ஆம் ஆண்டில் அமைத்துவிட்டது.

560 மில்லியன் டொலர் செலவில் அந்த தளம் அமைக்கப்பட்டது. சோமாலிய கடற் கொள்ளையர்களிடம் இருந்து சீன சரக்கு கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு என்ற போர்வையில் அங்கு சீனா தனது தளத்தை அமைத்தது. அங்கு இப்போது நீர்மூழ்கி கப்பல்களும் தரித்து நிற்கின்றன.

இந்த நிலையில் தான், சீனா இரண்டாவது கடற்படைத் தளத்தை எங்கு அமைக்கும் என்ற ஆய்வு அமெரிக்க பல்கலைக்கழக ஆய்வாளர்களால் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

2000ஆம் ஆண்டுக்கும் 2021ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், சீனா சுமார் 30 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ள, அல்லது நிதியளித்துள்ள 46 நாடுகளின், 78 துறைமுகங்களை மையப்படுத்தியே இந்த ஆய்வு



முன்னெடுக்கப்பட்டது. குறித்த துறைமுகங்களின் மூலோபாய இருப்பிடம், துறைமுகத்தின் ஆழம், அந்த நாட்டின் அரசியல் உறுதித்தன்மை மற்றும் ஐ.நா. பொதுச் சபையில் சீனாவுடன் இணைந்து வாக்களிக்கும் அரசாங்கங்களின் போக்கு ஆகியவற்றின் அடிப்படையிலேயே இந்த வரிசைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தியப் பெருங்கடலின் மத்தியில், மூலோபாய முக்கியத்துவம் மிக்க இடத்தில் அம்பாந்தோட்டை துறைமுகம் அமைந்திருப்பதும், சீனாவின் எந்தக் கடற்படைக் கப்பலும் தரித்துச் செல்வதற்குப் போதிய ஆழத்தை இந்தத் துறைமுகம் கொண்டிருப்பதும் சீனாவின் கடற்படைத் தளத்தை அமைப்பதற்கு அதிக வாய்ப்புள்ள இடமாக இதனை அடையாளப்படுத்தியுள்ளது. அத்துடன், ஐ.நா. பொதுச்சபையில் இலங்கை சீனாவுக்கு எதிராக வாக்களித்திருக்கவுமில்லை. அரசியல் உறுதித்தன்மை அதிகம் இல்லாதிருப்பதும் சீனாவுக்குச் சாதகமானது தான்.

ஏனைய நாடுகள், துறைமுகங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கை சீனாவுக்கு வாய்ப்பான தெரிவாக இருக்கிறது என்று கூறுகிறது அமெரிக்க ஆய்வு. இலங்கையின் அமைவிட முக்கியத்துவத்தினால் எல்லாக் காலங்களிலும், இங்கு தளம் அமைப்பது பல்வேறு நாடுகளின் கனவாகவே இருந்து வந்திருக்கிறது. சோழர்களின் படையெடுப்புத் தொடக்கம், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலம் வரை மாத்திரமன்றி, அதற்குப் பின்னரும் இலங்கையை தளமாக பயன்படுத்த பல்வேறு நாடுகளும் விரும்பின.

1980களின் தொடக்கத்தில், அமெரிக்கா திருகோணமலையில் தளம் அமைக்கப் போகிறது என்ற கதை இருந்தது. இந்தியாவும் அது குறித்து அச்சம் கொண்டிருந்தது. அதற்குப் பின்னர் இந்தியாவும் சில காலம் இலங்கையை தளமாக பயன்படுத்தியது. அதற்குப் பிறகு தான் சீனா காலூன்றப் போகிறது என்ற அச்சம் ஏற்பட்டது.

இலங்கையில் பிற நாடுகள் தளம் அமைக்கப் போவது தொடர்பான தகவல்கள் எல்லாமே ஊகங்களோ, வதந்திகளோ அல்ல. ஏனென்றால், இலங்கையின் அமைவிட முக்கியத்துவம் தான் அத்தகைய தகவல்கள் பரவுவதற்குக் காரணம். அம்பாந்தோட்டையில் சீனா தளம் அமைக்கப் போவதாக வெளியாகும் தகவல்கள் எல்லாமே உண்மையென்றோ பொய் என்றோ எடுத்துக் கொள்ள முடியாது.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில், இலங்கையில் சீனா தளம் அமைத்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறது. அதற்காக அவ்வப்போது, இவ்வாறான கல்லை வீசி, குட்டையைக் குழப்பவும் வாய்ப்பிருக்கிறது. அதற்காக இலங்கையில் தளம் அமைக்கும் எண்ணம் சீனாவுக்கு இல்லை என்று ஒரேயடியாக மறுத்து விட முடியாது.

500 கடற்படைக் கப்பல்களுடன் பிரமாண்டமான கடற்படையைக் கொண்டதாக வளர்ச்சி பெற்றுள்ள சீனா, அடுத்து தனது உலகளாவிய ஆதிக்கத்தை நிலைப்படுத்த புதிய புதிய தளங்களை அமைக்கும். அது தவிர்க்க முடியாத நியதி.

எலி கொழுத்தால் வளையில் தங்காது என்பது போலத் தான், ஒரு கட்டத்துக்கு மேல் ஒரு நாடு தனது படைகளை வளர்த்து விட்டால், அதற்கு மேல் அடங்கியிருக்காது.

சீனக் கடற்படையின் அபரிமித வளர்ச்சி, அதன் எல்லைகளுக்குள் அதனை மட்டுப்படுத்தி வைத்திருக்காது. இந்த உண்மையை உணர்ந்தவர்களால், இலங்கையில் சீனா தளம் அமைக்க விரும்புகிறது என்ற தகவலை ஒருபோதும் நிராகரிக்க முடியாது.

சீனாவிடம் கடன் பெற்றுள்ள இலங்கை, எல்லா தருணங்களிலும் சீனாவின் விருப்பத்தை புறக்கணிக்க முடியாது. இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையை சீனாவின் பக்கம் சாய விடாமல் தடுப்பதில் முனைப்புடன் இருக்கின்றன. இப்போது அமெரிக்கா, பிரான்ஸும் இணைந்து கொண்டிருக்கின்றன.

பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரோனின் குறுகிய இலங்கைப் பயணமும், ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் அண்மைய இலங்கைப் பயணமும், பூகோள அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவை.

சீனாவின் வியூகத்துக்கு தடைபோடும் வகையிலானவை. சீனாவுக்கு எதிராக உலகின் முக்கிய சக்திகள் இணைந்து செயற்படுகின்ற போதும், சீனா தனது தனித்துவமான செயற்பாடுகளின் ஊடாக நாடுகளை தன் பக்கம் இழுத்து வருகிறது.

இலங்கை அணிசேரா கொள்கையை பின்பற்றுவதாக கூறிக் கொண்டாலும், சீனா விடயத்தில் அது எப்போதும், அவ்வாறான நிலைப்பாட்டில் இருந்ததில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒக்டோபர் மாதம் சீனாவுக்கு மேற்கொள்ளவுள்ள பயணத்தின் போது தான், இலங்கை தொடர்பான சீனாவின் இப்போதைய எதிர்பார்ப்புகள் என்ன என்பது தெரிய வரும்.

கொவிட்டுக்குப் பின்னர், சீன - இலங்கை தலைவர்களுக்கிடையிலான உயர்மட்டச் சந்திப்புகள் இடம்பெறவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணம், சீனாவின் அடுத்த கடற்படைத்தளம் தொடர்பான ஊகங்களை தெளிவுபடுத்தக் கூடியதாக அமைந்தால் ஆச்சரியமில்லை.

# இந்திய உள்துறை அமைச்சர் இனப்படுகொலை என்று சொன்னாரா?

(15ம் பக்கத் தொடர்ச்சி) நான்கு கால்களையும் வானத்தை நோக்கி உயர்த்தியபடி தன் வயிற்றுப் பகுதியைக் காட்டியபடி மல்லாக்கக் கிடக்கும். அது ஒரு முழுச்சரணடைவு. நாயின் உறுப்புகளில் மிகப் பலவீனமானது அடி வயிற்றுப் பகுதி. அந்த மென்மையான அடிவயிற்று பகுதியை எதிரியிடம் முழுமையாக ஒப்படைத்து விட்டு நான் மோதலுக்கு தயார் இல்லை. எனது பலவீனத்தை நீ தாக்கலாம் என்று சரணடைவது.

ரணில் அத் தற்காப்பு உத்தியை நினைவு படுத்துகிறார். திருகோணமலையில் உள்ள எண்ணைக் குதங்களை இந்தியா பாவிப்பதற்கு அனுமதித்ததும் அவர் தான். இந்திய நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருளை விநியோகிப்பதற்கு அனுமதித்ததும் அவர் தான். இப்பொழுது சீன நிறுவனங்களுக்கும் அவர் அவ்வாறு அனுமதியை வழங்கியுள்ளார்.

அவர் டெல்லியில் வைத்து பாலம் கட்டத் தயார் என்று கூறிய பின்னர் தயான் ஜெயதிலக போன்ற சிலரைத் தவிர பெரும்பாலான சிங்களக் கட்சிகள் அது தொடர்பாக பெரிய அளவில் எதிர்ப்பைக் காட்டவில்லை. ஏனெனில், எல்லாருக்குமே தெரியும் ரணில் ஒப்புக் கொண்ட பாலத்தை மனதால் தான் கட்ட முடியும் என்று.63 நாயன்மார்களில் ஒருவராகிய பூசலார் கட்டிய மனக் கோவிலைப் போன்றதே அதுவும். அப்பாலம் ஓர் அரசியல் பௌதீக யதார்த்தமாக மாறக்கூடிய பிராந்தியச் சூழல் இப்பொழுது இல்லை. கொழும்புக்கும் புதுடெல்லிக்கும் இடையே நல்லுறவு உள்ளவரை அது சாத்தியமில்லை.

ஆனால் ஓர் அரசுத் தலைவர் என்ற அடிப்படையில் ரணில் சொன்னது இந்தியாவுக்கு ஒரு பிடி. அதை எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்று தான் இந்தியா சிந்திக்கும். இவ்வாறான ஒரு புவிசார் அரசியல் சூழலில் தான் இந்திய உள்துறை அமைச்சர் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார். இந்தியாவின் மிகப்பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் அவ்வாறு கூறியதை வெறுமனே தேர்தல் நோக்கிலானது என்று எடுத்துக் கொள்வதா? அல்லது அதற்குள் ஏதும் ராஜதந்திர பரிபாசைகள் உண்டு என்று எடுத்துக் கொள்வதா?

# ரணிலின் இந்திய விஜயத்தில் இலாபமடைந்த தரப்பு

## இந்தியாவா? இலங்கையா? ஈழத்தமிழரா?

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



இந்திய இலங்கை. நட்புறவினை வலுப்படுத்தியுள்ள ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் இரு நாள் இந்தியாவுக்கான விஜயம் அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதியின் இந்திய விஜயம் உள்நாட்டிலும், பிராந்திய, சர்வதேச அரசியலிலும் அதிக உரையாடலை தந்துள்ளது.

இதில் இந்தியா இலங்கையுடன் ஐந்து உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டுள்ளதுடன் உள்நாட்டிஸ் இனப்பிரச்சினைக்கான தீர்வில் பதின்மூன்றாம் திருத்தத்திற்கு அப்பால் செல்ல வேண்டும் என இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியுடன் உரையாடியதாக வியாக்கியானம் செய்யப்படுகிறது. அத்தகைய வியாக்கியானம் இராஜந்திர மொழிக்குள்ளாலேயே புரிந்து கொள்ளப்படுகிறது.

தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற வெளிப்படுத்துகை மூலமே அத்தகைய வியாக்கியானம் கொள்ளப்படுகிறது. கூட்டுறவுச் சமஷ்டி பற்றியோ, சமஷ்டி பற்றியோ எந்த உரையாடலையும் இந்தியப் பிரதமர் தெரிவிக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அப்படியாயின் இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தில் பயனடைந்த தரப்பு எதுவென்பதை தேடுவது அவசியமானதாக உள்ளது.

இக்கட்டுரையும் அத்தகைய நோக்கத்தை சார்ந்து அமையவுள்ளது. ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது ஐந்து புரிந்துணர்வு உடன்படிக்கைகள் எட்டப்பட்டன. அதில் திருகோணமலை பொருளாதார அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பிலான ஒப்பந்தம், சூரியசக்தி திட்டத்திற்கான எரிசக்தி அனுமதி ஓப்பந்தம், ஐ.பி.எல் மற்றும் லங்கா பே ஆகியவற்றுக்கிடையிலான வலையமைப்பு ஒப்பந்தம் மற்றும் யு.பி.ஐ. விண்ணப்ப ஏற்பு ஒப்பந்தம் என்பன அடங்குகின்றன.

ஏனைய உரையாடப்படும் விடயங்கள் அனைத்தும் இரு நாட்டுத் தலைவர்களும் பத்திரிகையாளர்களை சந்தித்த போது இரு தலைவர்களாலும் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களேயாகும். அதாவது இந்தியப் பிரதமர் ஊடகங்கள் முன் இலங்கையின் அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி தமிழ் மக்கள் கண்ணியத்துடனும் மரியாதையுடன் வாழ்வதை இலங்கை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

தமிழ் மக்களின் அபிலாசைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் எனவும் சமத்துவம் நீதி மற்றும் சமாதானத்தை உறுதி செய்ய வேண்டும் எனவும் மாகாணசபைத் தேர்தலை நடாத்துவது பற்றி இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் பிரதமர் நரேந்திர மோடி தெரினித்தார். இதன் போது இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரங்களை பகிர்தல் உள்ளிட்ட வடக்கு அபிவிருத்தித் திட்டங்கள் (வடக்கு, கிழக்கு என வியாக்கியானம் செய்யப்படுகிறது) தொடர்பான யோசனை ஒன்றினை ,ந்தவாரம் முன் வைத்துள்ளேன். தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு இந்த விடயத்தில் ,ணைந்து செயல்பட வேண்டும் என அனைத்துக் கட்சித்தலைவர்களுக்கும் நான் அழைப்பு விடுத்துள்ளேன். இது தொடர்பில் பொருத்தமான சட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் முன்வைக்கும் என்றார். இது குறித்து இந்தியப் பிரதமருக்கு விரிவான விளக்கத்தை வளங்கியுள்ளேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடும் போது, இலங்கை-இந்திய பாதுகாப்பும் பொருளாதார வளர்ச்சியும் ஒன்றே ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு மற்



றும் வளர்ச்சித் தேவைகளை உணர்ந்து ஒன்றாக செயல்பட வேண்டும் என இந்தியப் பிரதமர் கூறியுள்ளார். நாகபட்டின-காங்கேசன்துறை பயணிகள் படகுச் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும். கடற்றொழிலாளர் பிரச்சினை இரு தரப்பாலும் விவாதிக்கப்பட்டது. குறித்த விடயத்தை மனிதாபிமான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என இந்தியப் பிரதமர் மோடி குறிப்பிட்டதாக ரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவற்றை விட இந்திய ரூபாயை இலங்கையின் பரிவர்தனையில் பிரயோகப் படுத்துவது பற்றி உரையாடப்பட்டதாகவும் இந்தியாவுக்கும் இலங்கைக்கு இடையிலான தரைவழிப் போக்குவரத்துப் பற்றி பேசப்பட்டதுடன் அதற்கான சாத்தியக் கூற்று ஆய்வினை விரைவில் மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.


மேலும் தென் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எண்ணொய்க் குழாய்களை அமைப்பதன் மூலம் வலு சக்தி ஒந்துழைப்பு மற்றும் பிராந்திய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற் குறித்த விடயங்களை அவதானிக்கும் போது இலங்கை-இந்திய தரப்புக்களது அணுகுமுறையை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்று, இந்தியத் தரப்பு அந்தமாக இயங்கையின் நிலப்பரப்புக்குள் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்த முனைகிறது. அத்தகைய ஒத்துழைப்பின் மூலம் இரு நாட்டுக்குமான பிணைப்பினை வலுப்படுத்த முனைவதனைக் காணமுடிகிறது. குறிப்பாக வடக்குகிழக்கிலுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை நோக்கி இந்தியாவின் செல்வாக்கு பொருளாதார குறிகாட்டியூடாக நார்கிறதைக் காணமுடிகிறது. படிப்படியாக திருகோணமலையுடனான இந்திய நெருக்கம் விரிவாக்கம் பெறுகிறது. ஆரம்பத்தில் எண்ணெய்குதங்களை பராமரிப்பதென்ற நிலை காணப்பட்டது. தற்போது திருகோணமலையை வலு சக்தி மையமாக மாற்றுவது குறித்த உரையாடல் நிகழ்ந்துள்ளது. இது ஈழத்தமிழர்களுக்கு பாதுகாப்பனதாக அமைந்தாலும் மறுபக்கத்தில் ஈழத்தமிழருக்கு எதிரான நகர்வுகளை தென் இலங்கை மேற்கொள்வதற்கு வாய்பு அதிகமாகவே உள்ளது. அது மட்டுமன்றி இந்தியா ஜனாதிபதியுடனான உரையாடலிலேயே அதிக விடயம் முதன்மைப்படுத்தியுள்ளனர். அதற்கான ஒப்புதல் எதுவும் ஏறட்படுத்தப்பட்டதாகவோ இந்தியப் பிரதமருக்கு இலங்கை ஜனாதிபதி உறுதிமொழி ஏதும் வழங்கியதாகவோ தகவல் கிடையாது. இலங்கை உறுதிமொழிகளையே மீறுவதில் திறனுடைய ஆட்சியாளரைக் கொண்டது என்பது கடந்தகால அனுபவமாகும்.

இலங்கை ஆட்சியாளர்கள் இந்தியாவிடம் சரணடைவதையும் தந்திரமாக கையாளுவதில் தேர்ச்சியுன்னவர்கள். அவர்கள் எப்போது சரணடைவார்கள் எப்போது தந்திரமாக நகர்வார்கள் என்பதை அறிதல் கடினமாதாகும். நெருக்கடி வரும் போதெல்லாம் இந்தியாவை அரவணைக்கவும் ஏனைய சந்தர்ப்பத்தில் இந்தியாவை நிராகரிக்கவும் தயங்காதவர்கள். பொருளாதார நெருக்கடியை எதிர் கொள்ள புவிசார் பொருளாதார சக்தியாக இந்தியாவை முன்னிறுத்தியுள்ள தென் இலங்கை அதனை வெற்றிகரமாக கையாண்டு வருகிறது. ஆனால் இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு அரச முறைப்பயணம் மேற்கொண்ட போது சீனாலின் கம்யூனிஸக் கட்சியினர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தது உரையாடியதுடன் எதிர்கட்சி தலைவரையும் சந்தித்துள்ளனர். இது ஏறக்குறைய இந்தியாவை கையாளுவதற்கான உபாயமாகவே தெரிகிறது.

அது மட்டுமல்ல அதன் மூலம் அமெரிக்காவின் நகர்வுகளுக்கும் செய்தி சொல்லப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு தனது ஆதிக்கத்தில் வைத்திருக்க முயலும் சீனாயின் முன் இந்தியாவின் நகர்வு எதுவுமே எந்த உடன்பாட்டையும் கொண்டிராதது மட்டுமன்றி இந்துப் பத்திரிகை குறிப்பிடுவது போல் Still Incomplete ஆகவே தெரிகிறது. இத்தகைய ஆபத்தான பயணத்தில் இலங்கை ஆட்சியாளர்கள் இந்தியாவைதமது Entangle க்குள் கொண்டு வந்துள்ளது. இரு நாட்டுக்குமான தரை வழிப்பாதை வெறும் வாய் வார்த்தையாகவே தெரிகிறது. இந்தியா இலங்கையில் காலூன்ற நாடாளுமன்ற பிரதிநிதிகள் எவரும் ஆதரவளிக்கக் கூடாது (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# சமஷ்டி – தனிநாடு பின்னர் மீண்டும் சமஷ்டி தற்போது 13வது திருத்தமானது காப்பாற்றப்படுமா?

(17ம் பக்கத் தொடர்ச்சி) அவரால் தனிநாட்டுக்கு மாற்றான விடயமொன்றை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. ஆனால் 2009இற்கு பின்னர், ஏற்கனவே தோல்வி யடைந்த மிதவாதிகள், மீளவும் சமஸ்டி பற்றிப் பேசிய போது, இதனை எவருமே கேள்விக்குள்ளாக்கவில்லை. ஒப்பீட்டடிப்படையில் செல்வநாயகம் காலத்தில் மிதவாதிகள் குறிப்பிடத்தக்க அரசியல் சக்தியாக இருந்தனர். ஆளுமைமிக்க அரசியல்வாதிகள் இருந்தனர் ஆனாலும், அவர்களால் சமஸ்டிக் கோரிக்கையை வெற்றி கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் ஒப்பீட்டடிப்படையில் மிகவும் பலவீனமான நிலையிலிருக்கும் தற்போதைய மிதவாதிகளால் எவ்வாறு சமஸ்டியை அடைய முடியும்?

இந்தக் கேள்விக்கான பதிலாகவே இந்திய–இலங்கை ஒப்பந்தம் மீளவும் தமிழர் அரசியலில் தவிர்க்க முடியாத ஒன்றாக நோக்கப்படுகின்றது. ஏனெனில், இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற அதிகாரப்பகிர்வு ஏற்பாடு ஒன்று தான், இன்றுவரையில் நிலைத்து நிற்கின்றது. அதில் போதாமைகள் இருக்கின்றது என்பது எந்தளவிற்கு உண்மையோ, அதனைத் தாண்டிச் செல்வதற்கான பேரம் பேசும் ஆற்றலுடன் தமிழர் தரப்பு இல்லையென்பதும் உண்மையாகும். இந்த இடத்தில் புரிந்துகொள்ள வேண்டிய இன்னொரு பிரதான விடயம் உண்டு. அதாவது, தமிழர்களுக்கு எந்தவொரு வெளித்தரப்பினதும் ஆதரவும் இல்லை.

அவ்வாறானதொரு ஆதரவு நிலை இருந்திருந்தால், 13வது திருத்தச்சட்டத்தையாவது காப்பாற்ற வேண்டிய நிலைக்கு தமிழர் அரசியல் கீழிறங்கியிருக்காது. இந்த நிலைமையை புரிந்து கொண்டால், தற்போது இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொண்டு, முன்னேறும் வழிமுறை ஒன்றே, சாத்தியமான ஒன்றாக இருக்கின்றது. ஆனால் அதற்குக் கூட வெளித்தரப்புக்களின் அழுத்தம் அவசியப்படுகின்றது. இந்தியா ஒன்று தான் அவ்வாறான அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடிய ஒரேயொரு நாடாக இருக்கின்றது. இந்திய–இலங்கை ஒப்பந்தம் அதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. ஈழத் தமிழர்களும் இந்தியாவிடம் தான் தங்களின் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டியிருக்கின்றது ஏனெனில், தமிழ் மக்கள் சார்பில், இந்தியா தான் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கின்றது. இலங்கை விடயங்களை முன்னெடுக்க தவறும் போது, இந்தியாவின் தலையீட்டைக் கோரும் உரித்து தமிழ் மக்களுக்குண்டு.

யுத்தத்திற்கு பின்னரான கடந்த 14 வருடங்களில், தமிழ் தேசிய அரசியல்வாதிகள், புலம்பெயர் அமைப்புக்களும், பல முயற்சிகளை முன்னெடுத்ததாக கூறிக்கொண்டாலும் கூட, கொழும்பின் இராஜதந்திர லொபியை தோற்கடிப்பதில், தமிழர் தரப்பால் சிறிய வெற்றியைக் கூட பெற முடியவில்லை. அவ்வாறு வெற்றியை பெற்றிருந்தால், 13வது திருத்தச் சட்டத்திலுள்ள விடயங்களைக் கூட அமுல்படுத்துவதற்கு இந்தளவு சிக்கல்களை எதிர்கொள்ளும் சூழல் ஏற்பட்டிருக்காது. அதே வேளை, புதுடில்லியை நோக்கிச் செல்வதிலும், ஈழத் தமிழர் தரப்பால், குறிப்பிடத்தகு வெற்றியை பெறமுடியவில்லை. ஈழத் தமிழர் தரப்பின் தொடர் தோல்விகள்தான், தற்போதையை நிலைமைக்கு காரணம். எனவே இப்போதுள்ள சூழலில், 13வது திருத்தத்தையாவது பாதுகாப்போம் என்று கூறுபவர்கள் மீது கோபம் கொள்வதில் பயனில்லை. அவர்கள் தற்போதுள்ள சூழலில் சாத்தியமானதை பேசுகின்றனர். தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ளவர்கள் அவ்வாறு தான் சிந்திக்க முடியும்.

உண்மையில், கடந்த 14 வருடங்களாக, வெட்டிக் கதைகள் பேசிக் கொண்டிருந்த, தமிழ் தேசியவாதிகள் என்போர் மீதுதான், உண்மையிலேயே, கோபப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக தங்களை 24கரட் தேசியவாதிகளாக காண்பிக்க முற்படுவர்கள் மீதுதான், தமிழ் சமூகம், அதன் கோபத்தை காண்பிக்க வேண்டும். ஏனெனில், காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும். பின்னர் காற்று வரவில்லையே என்று அங்கலாய்ப்பதில் பயனில்லை. ஈழத் தமிழ் சமூகத்தின் இன்றைய நிலைக்கு சந்தர்ப்பங்களை நிறுத்துப் பார்த்து, பயன்படுத்தத் தெரியாமல் போனமையே அடிப்படையான காரணமாகும். முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது போல், ஈழத் தமிழ் அரசியல் தொடர்ந்தும் சறுக்கிக்கொண்டே செல்கின்றது. சந்தர்பங்கள் நழுவ விடப்படுகின்ற போது, மீண்டும் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் முன்னரைப் போல் இருக்க வாய்ப்பில்லை. 13வது திருத்தச்சட்ட விவகாரம் இதற்கு சிறந்த உதாரணமாகும். அன்றிருந்த சூழலில், 13வது திருத்தச்சட்டத்தின் பெறுமதியும், அதனை பயன்படுத்துவற்கான தமிழருக்கான வாய்ப்பும் வேறு விதமானது. அன்று தமிழருக்கான முழுமையான ஆதரவு நிலையில், ஒரு பிராந்திய சக்தியே இருந்தது. இந்திய இராணுவம் வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்தது. ஆளுனர், முதலமைச்சரை பார்த்து நடுங்கினார். இப்போதுள்ள நிலைமை முற்றிலும் வேறானது. இன்றைய நிலையில் ஈழத் தமிழர்களுடன், முழுமையான ஆதரவு நிலையில், எவரும் இல்லை. நிரந்தர நண்பர்களை பெறும் வகையிலான புத்திசாலித்தனமான அரசியலை, தமிழர்கள் முன்னெடுக்கவுமில்லை.

## தமிழர் பிரதேசங்களை திட்டமிட்டு

(4ம் பக்கத் தொடர்ச்சி) குறுகிய நலன்களுக்காக சிலரினால் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான விடயங்கள் வேதனைக்குரியவை எனவும் சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

தேசிய நல்லிணக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட இணக்க அரசியல் என்பது, இருப்பவற்றை பாதுகாத்து முன்னோக்கி நகர்வதாகவும் பிரச்சினைகளை இலகுவாக தீர்ப்பதற்கான பொறிமுறையாகவும் இருக்க முடியுமே தவிர, தவறான நடவடிக்கைகளை கண்டுகொள்ளாமல் கடந்து செல்வதாக இருக்க முடியாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை அமைச்சரவை ஏற்றுக் கொண்ட நிலையில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி குறித்த விடயம் தொடர்பாக தொடர்ந்தும் அமைச்சரவைகளில் கலந்துரையாடி சரியான தீர்மானங்களை மேற்கொள்வதன் ஊடாக தவறுகள் இடம் பெற்று இருப்பின் திருத்திக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் இந்தியாவுக்கு சென்று வந்ததன் பின்னர் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதும் மீண்டும் மாகாண சபை முறைமையை ஸ்தாபிப்பதுவும் பேசுபொருள்களாக ஆகியுள்ளன.

பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகள் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதனை இனப்பிரச்சினை தீர்விற்கான ஆரம்பபடி முறையாக ஏற்பதற்கான தமது விருப்பை வெளியிட்டும் உள்ளன. பதின் மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் மாகாண சபைகளை மீண்டும் ஸ்தாபிப்பதாகும்.

பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி சர்வ கட்சிகளின் கூட்டத்தை கூட்டினார். ஆயினும், இந்திய விஜயத்திற்கு முன்னரும் பின்னரும், பாராளுமன்றத்திலுள்ள அரசியல் கட்சிகளின் இணக்கமின்றி மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட மாட்டாது என்ற தனது நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக முன்னர் தெரிவித்த ஜனாதிபதி, பின்னர் தனது நிலைப்பாட்டினை மாற்றிக் கொண்டதற்கான முக்கிய காரணம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு, குறிப்பாக மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதற்கு தென்னிலங்கையில் எழுந்த எதிர்ப்பாகும்.

13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு முப்பத்தாறு வருடங்கள் ஆகியுள்ள போதிலும் இதுவரை எச்சந்தர்ப்பத்திலும் மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படவில்லை.

### தென்னிலங்கையின் எதிர்ப்பு

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவதற்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு இருந்து வருகின்றது. பௌத்த பிக்குகளும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவதற்கான தமது கடும் எதிர்ப்பினை பல தடவைகள் வெளியிட்டுள்ளனர்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் மூலம் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவதனை இல்லாதாக்கும் வகையில் தான் அரசியலமைப்பிற்கு இருபத்திரண்டாவது திருத்தத்தினைக் கொண்டு வரவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவினதான பொலிஸ் அதிகாரமே வழங்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளின் பொலிஸ் அதிகாரம் தொடர்பில் தென்னிலங்கையிலுள்ள பெரும் பாலானவர்கள் மத்தியில் தவறான புரிந்துணர்வு இருந்து வருகின்றது. மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற தவறான புரிந்துணர்வினை அவர்கள் கொண்டிருக்கின்றார்கள்.

### தேசியப் பாதுகாப்பு

பொலிஸ் அதிகாரம் என்பது பொது ஒழுங்குடன் சம்பந்தப்பட்டது. தேசிய பாதுகாப்பு என்பது முப்படையினருடன் சம்பந்தப்பட்டது. தேசிய பாதுகாப்பு பற்றிய விடயங்கள் எதுவும் மாகாண சபைகளின் அதிகாரத்தினுள் உள்ளடக்கப்படவில்லை. பதின்மூன்றாவது திருத்தத்தில் இரண்டு இடங்களில் இவ்விடயம் மிக தெளிவாக வலியுறுத்திக் குறிப்பிடப்பட்




டுள்ளதுதேசிய பாதுகாப்பிற்குப் பொறுப்பான முப்படையினர் மத்திய அரசாங்கத்தின் குறிப்பாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளனர். எனவே மத்திய அரசாங்கம் விரும்பும் போது விரும்பிய இடத்திற்கு முப்படையினரை அனுப்பி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முப்படையினரை அனுப்புகின்ற போது மாகாண முதலமைச்சரின் சம்மதத்தைப் பெற வேண்டிய அவசியமும் இல்லை. எனவே, மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையாது.

### மாகாண பிரதிப் பொலிஸ் மாஅதிபர்

பதின்மூன்றாவது திருத்தத்தின்படி, மாகாணப் பிரதி பொலிஸ் மாஅதிபரை நியமிப்பதில் பொலிஸ் மாஅதிபருக்கும் மாகாண முதலமைச்சருக்கும் இடையே இணக்கப்பாடு இருந்தால் அவர்களால் கூட்டாக நியமிக்கப்படுபவர் மாகாண பிரதி பொலிஸ் மாஅதிபர் ஆவார்.

இணக்கப்பாடு என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளதால் பொலிஸ் மாஅதிபருக்கும் மாகாண முதலமைச்சருக்கும் இடையேயான இணக்கப்பாடு இல்லாத போது அவர்களால் மாகாண பிரதி பொலிஸ் மாஅதிபரை நியமிக்க முடியாது.

பொலிஸ் மாஅதிபருக்கும் மாகாண முதலமைச்சருக்கும் இடையே இணக்கப்பாடு இல்லாத போது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவானது மாகாண முதலமைச்சருடன் கலந்துரையாடி மாகாண பிரதி பொலிஸ் மா அதிபரை நியமிக்கும்.

கலந்துரையாடல் என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளதால் மாகாண முதலமைச்சருடனான கலந்துரையாடல் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவைக் கட்டுப்படுத்தாது. எனவே, மாகாண முதலமைச்சர் விரும்புகின்ற ஒருவரை அல்லாது தேசிய பொலிஸ் ஆணைக்குழு விரும்புகின்ற ஒருவரையே மாகாண பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கலாம்.

### மானாண பொலிஸ் ஆணைக்குழ

மாகாண பொலிஸ் சேவைக்கான ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவி உயர்வு மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவைகள் மாகாண பொலிஸ் ஆணைக் குழுவின் கீழ் வருகின்றன. இவ்வாறான அதிகாரங்களைக் கொண்ட மாகாண பொலிஸ் ஆணைக்குழுவில் மூன்று அங்கத்தவர்கள் உள்ளனர்.

மாகாண பொலிஸ் ஆணைக்குழுவில் மாகாண பிரதி பொலிஸ் மாஅதிபர், ஜனாதிபதியுடன் கலந்துரையாடல் செய்து பகிரங்க சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர் மற்றும் மாகாண முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர் ஆகியோர் அங்கத்தவர்களாக இருப்பர். எனவே, மாகாண பொலிஸ் ஆணைக்குழுவின் மூன்று அங்கத்தவர்களில் ஒரு அங்கத்தவர் மாத்திரமே மாகாண முதலமைச்சரின் விருப்பத்தில் நியமிக்கப்பட்டவராக இருப்பார்.

### மாகாண பொலிஸாரின் ஆயதங்கள்

மாகாண பொலிஸார் பயன்படுத்துகின்ற சுடுகலன்கள் மற்றும் கருவிகள் ஆகியவைகளின் வகை மற்றும் அளவு என்பவை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் மாகாண பொலிஸ் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல் செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படும்.

இதில் கலந்துரையாடல் என இருப்பதனால் மாகாண பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானத்தால் தேசிய பொலிஸ் ஆணைக்குழு கட்டுப்படாது. மாகாண பொலிஸ் ஆணைக்குழுவிலும் கூட ஒரு


கட்டுரையாளர்:-
கொழும்பில் இருந்து
பேராசிரியர்
– அ.சர்வேஸ்வரன் –




அங்கத்தவரே மாகாண முதலமைச்சரின் விருப்பத்தில் நியமிக்கப்பட்டவராக இருப்பார். எனவே, மாகாண பொலிஸார் பயன்படுத்துகின்ற ஆயுதங்களைப் பற்றித் தீர்மானிப்பது மாகாண பொலிஸ் ஆணைக்குழு அல்லாது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவாகவே இருக்கும்.

### மாகாண பொலிசாரின் கீழான குற்றங்கள்


மாகாணங்களினுள் பொது ஒழுங்கைப் பேணுவதற்குப் பொறுப்பாக மாகாண பொலிஸார் இருப்பார்கள். மாகாண பொலிஸார் தேசிய பொலிஸாருக்குக் கீழே வருகின்ற குற்றச் செயல்கள் தவிர்ந்த ஏனைய குற்றங்களை மாகாணத்தினுள் தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் புலனாய்வு செய்வதற்கும் பொறுப்பாக இருப்பார்கள்.

அரசுக்கு எதிரான குற்றங்கள், முப்படையினர் சம்பந்தப்பட்ட குற்றங்கள், தேர்தல் குற்றங்கள், நாணயங்கள் சம்பந்தப்பட்ட குற்றங்கள், அரச அதிகாரிகளுக்கு எதிரான குற்றங்கள், அரச சொத்துக்களுக்கு எதிரான குற்றங்கள், தேசிய பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகள் சம்பந்தப்பட்ட குற்றங்கள், மத்திய அரசிற்குட்பட்ட விடயங்கள் தொடர்பான குற்றங்கள், ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களிலுள்ள (22ம் பக்கம் பார்க்க)





EELANADU 11 Aug 2023 ஈழநாடு


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சீராக நடக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும். வழக்குகளில் மெத்தனம் காணப்படும்.




மிதுனராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.




கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.




சிம்மராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.




கன்னிராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும்.





துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக் கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும்





விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி பணிகளை கவனிப்பர்.







தனுசுராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக் கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல்கள் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே1 சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம்நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் வித்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சனைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.




மீனராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சு நடக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# ரணிலின் இந்திய விஜயத்தில் இலாப..

(19ம் பக்கத் தொடர்ச்சி) பொது ஜன பெரமுனக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீர சேகராதெரிவித்துள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இரண்டு ஈழத்தமிழன் தரப்பு இந்தியாவின் நதய்வு களை வரவேற்றுள்ளது. இரு நாட்டுத் தலைவர்களது சந்திப்பில் தமிழருக்கு 13ஆம் திருத்த சட்டமூலம் முழுமையாக அமுல்படுத்தப்படும் எனக் கருதுகின்றனர். இது குறித்து இந்துப்பத்திரிகை வெளிப்படுத்திய தகவல் முக்கியமானது. புதுடில்லி மீது வேறு விவகாரங்களுக்காக இலங்கை தங்கியிருந்தாலும் இரு நாடுகளுக்குமிடையில் இரு தரப்பு உறவுக்குள் தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்தியாவின் வரலாற்று ரீதியான அக்கறைகளை கொண்டு வருதை இனிமேலும் கொழும்பு விரும்பப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளது. இதுவே யதார்த்தமானது மாகும். அமுலாக்கக் கூடாது என்பதற்காக செய்யப்பட்ட உடன்படிக்கையே இலங்கை-இந்திய உடன்பாடு. அதன் பிரகாரம் உருவான 13வது திருத்தச் சட்டமூலத்திற்கும் அதே நிலையே. ஆனால் இது இந்தியாவை கையான கடந்த 35 வருடம் பயன்பட்டுள்ளது. இனிவரும் காலத்திலும் பயன்படும். ஆனால் அது ஒருபோதும் அமுலாகாது. இந்தியாவை சிக்க வைப்பதில் தென் இலங்கைக்கு 13 திருத்தம் போதுமானது.

எனவே இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம் இரு நாட்டுக்கும் பொருளாதார ரீதியில் இலாபகரமானதாகவே தெரிகிறது. ஆனால் இலங்கைத்தீவை விட இந்தியாவுக்கு அதிக பயனுள்ளது போல் காட்சிப் படுத்தப்படுகிறது. இறுதியில் இலாப த்தை அடையும் நிலையில் தென் இலங் கையே காணப்படுகிறது. இதில் முழு மையான பதிப்பினையும் இழப்பினையும் எதிர்கொள்ளும் தரப்பாக ஈழத்தமிழரே காணப்படுகின்றனர். இந்தியா தற்காலிக வெற்றி அடைந்துள்ளதாகவே உள்ளது. நிரந்தரமான இலாபத்தை தென் இலங்கையே பெற்றுள்ளது.

நீண்ட காலத்திற்கு மாற்றமே இன்றி ஏமாற்றப்படும் இனமாக ஈழத்தமிழர் உள்ளனர். அவர்கள் இரு தரப்பாலும் ஏமாற்றப்படும் நிலையே உள்ளது. ஐந்து உடன்படிக்கையை இருநாடுகளும் மேற்கொண்ட போதும் ஈழத்தமிழருக்கான தீர்வில் ஏதாவது ஒப்பந்தத்தையோ உறுதிமொழியையோ இரு தரப்பும் எட்டவில்லை.

அப்படியாயின் ஈழத்தமிழர் தரப்பு எடுத்த முயற்சிகளும் வரைந்த கடிதங்களும் நடாத்திய சந்திப்புகளும் எதற்கானது. இந்தியாவுக்காக பரிந்து உரையாடுவதில் எத்தகை பயனை ஈழ தமிழ் தரப்புக்கள் அடைந்துள்ளன என்ற கோள்வி தவிர்க்க முடியாததே. 13க்குள் தீர்வு என கோரும் தரப்புக்கள் அதுவும் சாத்தியமற்றுள்ளது என்றதன் பின் எத்தகைய அரசியலை நகர்த்த திட்டமிடுகிறது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

# மாகாண சபைகளுக்கு பொலிஸ் ...

(21ம் பக்கத் தொடர்ச்சி) நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட குற் றங்கள், சர்வதேச குற்றங்கள் போன்றவை தேசிய பொலிஸாரின் அதிகாரத்தின் கீழேயே உள்ள.

தேசிய பொலிஸாரின் கீழ் வருகின்ற குற்றங்கள் தொடர்பிலான வாசகங்கள் பரந்த பொருள்விளக்கத்திற்கு உட்படக் கூடியவைகளாகவும் பல்வேறுபட்ட வகைக் குற்றங்களை உள்ளடக்கக் கூடியவைகளாகவும் உள்ளன. இவ்வாறாக, மாகாண சபைகளின் பொலிஸ் அதிகாரம் என்பது மட்டுப்படுத்தப்பட்ட குற்றங்கள் சம்பந்தப்பட்டதாகவே உள்ளது.

### அவசரகால நிலை பிரகடனம்

மாகாணமொன்றினுள் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாகாணப் பிரதி பொலிஸ் மா அதிபரின் நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றுபவர்களாக இருப்பார்கள். மாகாணத்தினுள் பொது ஒழுங்கை நிலைநாட்டுவது மாகாணத்தினுள் பொலிஸ் அதிகாரங்களைப் பிரயோகிப்பது தொடர்பில் மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் மாகாண முதலமைச்சருக்குப் பொறுப்புக் கூற வேண்டியவராகவும் அவரது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவராகவும் இருப்பார்.

ஆயினும், மாகாணமொன்றினுள் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போது, மாகாண முதலமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அத்தகைய பொலிஸ் அதிகாரங்களை ஜனாதிபதி பொறுப்பேற்கலாம் என்பதுடன் மாகாணத்தினுள் பொது ஒழுங்கு தொடர்பான மாகாண நிருவாகத்தையும் தான் பொறுப்பேற்கலாம். மாகாணமொன்றினுள் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போது அந்த மாகாணத்தினுள் பொது ஒழுங்கைப் பேணுவதற்கு தேசிய பொலிஸாரை பொலிஸ் மாஅதிபர் அனுப்பி வைக்கலாம்.

ஏதேனும் குழப்பம் காரணமாக மாகாணத்தினுள் பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்கு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி கருதுகின்ற போது அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தாது. மாகாண முதலமைச்சருடன் கலந்துரையாடி மாகாணத்தினுள் பொது ஒழுங்கை மீளக் கட்டியெழுப்புவதற்காக தேசிய பொலிஸாரை ஜனாதிபதி அந்த மாகாணத்திற்கு அனுப்பி வைக்கலாம். கலந்துரையாடல் என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளதால் முதலமைச்சரின் விருப்பத்திற்கு மாறாகக் கூட ஜனாதிபதி தேசிய பொலிஸாரை குறித்த மாகாணத்திற்கு அனுப்பி வைக்க முடியும்.

நாம் மேலே பார்த்தவாறாக மாகாண பொலிஸ் அதிகாரம், தேசிய பாதுகாப்பை உள்ளடக்காது என்பதாலும், மாகாண பிரதி பொலிஸ் மாஅதிபர் பெரும்பாலும் மத்திய அரசின் விருப்பத்திற்குரியவராக இருப்பார் என்பதாலும், மாகாண பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களில் ஒருவர் மட்டுமே மாகாண முதலமைச்சரின் விருப்பத்திற்குரியவராக இருப்பார் என்பதாலும், மாகாணப் பொலிஸார் பயன்படுத்துகின்ற ஆயுதங்களின் வகை மற்றும் அளவைத் தீர்மானிப்பதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவே இருக்கும் என்பதாலும், தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட குற்றங்கள் உட்பட பல முக்கிய குற்றங்கள் தேசிய பொலிஸாரின் கீழ் வருவதாலும், அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போது ஜனாதிபதி மாகாண முதலமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரங்களை தான் பொறுப்பேற்கலாம் என்பதுடன் அந்த மாகாணத்தினுள் பொது ஒழுங்கைப் பேணுவதற்கு தேசிய பொலிஸாரை பொலிஸ் மாஅதிபர் அனுப்பி வைக்கலாம் என்பதாலும் மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது எவ்வகையிலும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைய மாட்டாது.

### முடிவுரை

சட்டம் ஒழுங்கு பேணப்பட்டு மக்கள் அச்சமின்றி அமைதியுடன் வாழ்வதை முழுமையாக உறுதிப்படுத்த வேண்டுமென்றால், மக்களின் நேரடி ஆட்சியாளர்களிடம் பொலிஸ் அதிகாரம் இருத்தல் வேண்டும். அதிகாரப் பரவலாக்கலின் கீழ் மக்களின் நேரடி ஆட்சியாளர்களாக மாகாண சபைகள் இருப்பதனால், மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுதல் வேண்டும். பொலிஸ் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டால், மாகாணமொன்றினுள் எழக் கூடிய சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய பிரச்சினைகளுக்கு மக்களுக்குப் பதிலளிக்க வேண்டியதாக சம்பந்தப்பட்ட மாகாண சபை இருக்கும். அந்த மாகாண சபைக்குப் பதிலளிக்க வேண்டியவர்களாக மாகாணப் பொலிஸார் இருப்பார்கள்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death


**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


JOIN WITH ME ON AUGUST 12TH AND 13TH, 2023
THE BIGGEST PRE CONDO AND HOUSES DEAL EVENT.
THE GREATEST REAL ESTATE SALES EVENT EVER
MORE THAN 30+ SITES
(DEVELOPERS AND BUILDERS) THROUGH OUT.
UP TO $100K DISCOUNT.
GTA, CALGARY, EDMONTON, OTTAWA AND MORE...
TOP DEVELOPERS WITH THE BEST INCENTIVES
ON SITE MORTGAGE APPROVAL. 5% DEPOSIT.
PERFECT DAY!
THE GREATEST DEAL EVENT EVER
LONG CLOSING AND MORE.....
647-406-6352


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.